39

# அரசியல் தீர்மானம்

[பாலக்காடில், 1956, ஏப்ரல் 19 முதல்
29 வரை நடந்த இந்தியக் கம்யூனிஸ்ட்
கட்சியின் நாலாவது காங்கிரஸில்
நிறைவேற்றப்பட்டது.]

க் கம்யூனிஸ்ட் கட்சி
மிழ்நாடுக் கமிட்டி,
சென்னை-14.

# அரசியல் தீர்மானம்

[பாலக்காடில், 1956, ஏப்ரல் 19 முதல்
29 வரை நடந்த இந்தியக் கம்யூனிஸ்ட்
கட்சியின் நாலாவது காங்கிரஸில்
நிறைவேற்றப்பட்டது.]

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடுக் கமிட்டி,
சென்னை-14.

முதற்பதிப்பு ஜூன் 1956.

(விலை 4 அணா)

கிடைக்குமிடம் :
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
199, மவுண்ட் ரோடு, சென்னை-2.

ஜனசக்தி பிரஸ், சென்னை-6.

# அரசியல் தீர்மானம்

## 1. தேச சுதந்திரம், சமாதானம், ஆசிய ஒற்றுமை ஆகிய லட்சியங்களை இந்தியா ஆதரித்துப் போராடுகிறது.

உலக ரீதியில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் பெருமளவு நிறைந்துள்ள காலக்கட்டத்தில் நாம் வாழ்கிறோம். உலக ஏகாதிபத்திய அமைப்பில் அக்டோபர் புரட்சி ஏற்படுத்திய பிளவானது மேலும் விரிவடைந்துள்ளது; பாஸிஸ சக்திகளின் மீது ஏற்பட்ட வெற்றிக்குப்பின் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவ ஆட்சிக்கு முடிவு கட்டியது, சீன மக்கள் குடியரசின் தோற்றம், கொரியா, வியத்-நாம் ஜன நாயகக் குடியரசுகள் நிறுவப்பட்டது ஆகியவற்றின் மூலம் இப்பிளவு விரிவடைந்துள்ளது.

ஒரு தனிநாட்டின் எல்லைக்குள் சோஷலிஸம் தோன்றி, அது ஒரு உலக அமைப்பாக மாறியுள்ளதும், சோஷலிஸ உலகின் வளர்ந்துவரும் ஒற்றுமையும், கெட்டித்தன்மையும் உலக வளர்ச்சிகளின் போக்கிலே சக்திவாய்ந்ததோர் செல்வாக்கைச் செலுத்துகின்றன. சக்திகளின் தராதர பலமானது சோஷலிஸ, ஜன நாயக சக்திகளுக்குச் சாதகமாக தீர்மானமான முறையிலே மாறியுள்ளன. சோஷலிஸ உலகின் பிரமிக்கத்தக்க சாதனைகள், முதலாளித்துவ உலகிற்கும் அதற்குமிடையேயுள்ள வளர்ந்துவரும் மாறுபாடு ஆகியவற்றின் காரணமாக சோஷலிஸக் கருத்துக்கள், ஒவ்வொரு நாட்டின் பரந்த ஜனப்பகுதிகளின் ஆதரவைப் பெற்று வருகின்றன.

காலனி, அரைக்காலனி நாடுகளில் தேசிய விடுதலை இயக்கங்கள் மகத்தான வெற்றிகள் பெற்றுள்ளன; என்றும் காணு முன்னேற்றத்தை அடைந்துள்ளன; இவை ஏகாதிபத்திய காலனி அமைப்பை உடைத்தெறியக்கூடிய உதைகளைக் கொடுத்துள்ளன. இந்த அமைப்பானது துரிதமாகச் சின்னாபின்னமாகி வருகிறது.

முன்னுளைய காலனி உலகைச் சேர்ந்த பல நாடுகள், இன்று ஏகாதிபத்திய ஆட்சியைத் தூக்கி எறிந்துவிட்டு, சுதந்திர வளர்ச்சிப்பாதையிலே செல்லுகின்றன; அவை சமாதான, சுதந்திரப் போராட்டத்தில், சோவியத் உலகிலே ஒரு உறுதியான நேச சக்தியைக் காண்கின்றன. தங்களின் தேசப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி, ஏகாதிபத்திய நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலையை நீக்கிக்கொள்ள, இந்த நாடுகளுக்கு சோஷலிஸ உலக மார்க்கெட் சக்திவாய்ந்ததோர் சாதனமாகத் திகழ்கிறது. சோஷலிஸ நாடுகளுக்கும், முன்னுளைய காலனி நாடுகளுக்குமிடையே மிக நெருங்கிய உறவு மேலும் மேலும் ஏற்படுவதில் இது கொண்டு விடுகிறது; இதனுல் ஏகாதிபத்திய அமைப்பு மேலும் பலவீனப் படுகிறது.

இந்த வளர்ச்சிகள் ஏகாதிபத்திய நாடுகளின் ஆதிக்க மண்டலத்தைக் கணிசமான அளவு குறைத்துள்ளன; முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியை ஆழமாக்கியுள்ளன. அதனுடைய முரண்பாடுகளையும் முற்ற வைத்துள்ளன.

இந்த முரண்பாடுகளைத் தீர்த்து, தங்கள் அமைப்பிலுள்ள நெருக்கடியைப் போக்க, ஏகாதிபத்தியவாதிகளிடையேயுள்ள மிக மோசமான ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டுள்ள ஆசாமிகள், தொழிலாளி வர்க்க, ஜனநாயக, தேச விடுதலை இயக்கங்களை நசுக்க முயற்சிக்கின்றனர். இராணுவக் கூட்டணிகள் என்ற போர்வையில் ஆசிய மக்களின்மீது மீண்டும் காலனி ஆட்சியைப் புகுத்த முயல்கின்றனர்; யுத்தத்தின் மூலமாக உலக ஆதிக்கம் பெற எத்தனிக்கின்றனர்.

அணுசக்தி ஆயுதங்களைத் தடைசெய்யும் யோசனைகளை அவர்கள் நிராகரிக்கின்றனர். மேற்கு ஜெர்மனியை ஆயுதமயமாக்கும் பாதையில் முன்சென்று, ஜெர்மன் மக்கள் சமாதானபூர்வமாக ஒன்றுபடுவதை அவர்கள் தடைசெய்கின்றனர். வியத்-நாமை ஒன்றுபடுத்துவதற்கான திட்டத்திற்கு உலைவைக்கின்றனர். பல பிராந்தியங்களிலே நெருக்கடியை உண்டாக்க முயற்சிக்கின்றனர்.

ஆனுல், ஏகாதிபத்திய வாதிகளின் இந்த முயற்சிகளெல்லாம் தோல்விமேல் தோல்வி அடைந்துவருகின்றன. இராணுவக் கூட்டணிகளில் பங்குகொள்ளாமலிருப்பதைத் தங்கள் அந்நிய நாட்டுக் கொள்கையின் கோட்பாடாக அறிவித்துள்ள பல நாடுகள் இந்த யுத்தத் திட்டங்களை எதிர்க்கின்றன. ஒரு பெரிய சமாதானப் பிரதேசம் உருவாகியுள்ளது.

சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக, சமாதானத்தை விரும்பும் சோஷலிஸ்ட் நாடுகள் எடுத்துள்ள தைரியமும், உறுதியும்

வாய்ந்த நடவடிக்கைகள்; அவற்றின் வளர்ந்துவரும் ஒற்றுமையும், பலமும்; நெருக்கடியைத் தளர்த்த அவர்கள் எடுத்துள்ள பயன்தரத்தக்க நடவடிக்கைகள், இந்தியாவின் தலைமையின்கீழ் பல சோஷலிஸ்ட் அல்லாத நாடுகளின் சமாதானப் பங்கு; தொழிலாளிவர்க்க, ஜனநாயக, சமாதான இயக்கங்களின் சக்தி வாய்ந்த வளர்ச்சி ஆகியவை எல்லாம் மீண்டும் மீண்டும் யுத்த வெறியர்களின் திட்டங்களை முறியடித்துள்ளன. அதுமட்டுமல்ல; சர்வதேச உறவுகளிலேயே புதியதோர் சூழ்நிலையை உருவாக்கவும் வழி வகுத்துள்ளன. சமாதான சகவாழ்வு எனும் கருத்தும், அரசாங்கங்களுக்கிடையே உள்ள தகராறுகளை சமாதானமான முறையில் தீர்த்துக்கொள்ளும் கோட்பாடும் சரித்திரபூர்வமான வெற்றிகளைப் பெற்றுள்ளன.

யுத்த அபாயம் இன்னும் இருக்கின்றது; சமாதான சக்திகளின் தொடர்ந்த போராட்டம் இதற்குத் தேவைப்படும் ஆனால் இந்த சமாதான சக்திகள் மகத்தான பலத்தை ஏற்கனவே பெற்றுள்ளன; மேலும் அவை துரிதமாகப் பலமடைந்து வருகின்றன. இந்நிலைமையில், உலகை ஒரு யுத்தத்திலே சிக்கவைக்கும் முயற்சியை முறியடித்து, நிலையான சமாதானத்தை நிலைநாட்ட வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. எல்லா நாடுகளிலுமுள்ள யுத்தத்தை எதிர்க்கும் சகல சக்திகள், கட்சிகள், ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் விரிந்த ஒற்றுமையைக் கட்டுவதற்கும்; சர்வதேச நெருக்கடியை மேலும் குறைத்து, அரசாங்கங்களுக் கிடையே நேச உறவை நிலைநாட்ட இன்னும் உறுதியான போராட்டத்தை நடத்துவதற்கும்; இந்த வாய்ப்பும், இந்த வாய்ப்பின் விளைவாகப் பிறந்துள்ள நம்பிக்கையும் சமாதான வீரர்களை உந்தித் தள்ளுகிறது.

இந்தியா புதிதாகப் பெற்றுள்ள சுதந்திரமும், அரசுரிமையும் ஏகாதிபத்திய அரசுகளின் பயமுறுத்தலுக் குள்ளாக்கப்படும் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரித்துள்ளது; இந்த ஏகாதிபத்திய அரசுகள் தங்களின் யுத்த முயற்சிக்காகவும், காலனி ஆதிக்கம் பெறுவதற்காகவும், சுதந்திர தேசங்களை அடிமைப்படுத்த முனைந்து நிற்கின்றனர்.

ஐரோப்பிய அரசுகளுடன் சேர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியம் உருவாக்கியுள்ள இராணுவக் கூட்டணிகள் எல்லாம் சோவியத் யூனியனுக்கு எதிராகமட்டும் திருப்பிவிடப்பட்டதல்ல; ஆசிய நாடுகள் உள்ளிட்ட சகல தேசங்களின் சுதந்திரத்திற்கும், சுயேச்சைக்கும்கூட ஆபத்தை விளைவிக்கக் கூடியது என கட்சி எச்சரித்தது. இந்தியாவின்பால் பிரிட்டனுக்கு நட்பிருப்பதாக பாசாங்கு செய்தபோதிலும், இந்தியா பிரிட்டிஷ் காமன்வெல்த்துடன்

தொடர்பு கொண்டிருந்த போதிலும், பிரதான காலனி அரசுகளுள் ஒன்றான பிரிட்டன் இந்திய சுதந்திரத்தைக் குலைக்க அனைத்தையும் செய்யும் எனக் கட்சி கூறியது.

எனவேதான், ஆரம்பத்திலிருந்தே, பிரிட்டிஷ் செல்வாக்கிலிருந்து விடுபட்ட ஒரு அந்நிய நாட்டுக் கொள்கை, சகல தேசங்களுக்குமிடையே நட்புறவை அடிப்படையாகக் கொண்ட ஒரு கொள்கை, ஒரு சமாதானக் கொள்கை, காலனி ஆதிக்கத்தையும், யுத்தத்தையும் எதிர்க்கும் கொள்கை வேண்டுமெனக் கட்சி கோரியது. ஏகாதிபத்தியத்தையும் யுத்தத்தையும் எதிர்க்ககூடிய ஒரு முரணற்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம்தான் இந்தியாவின் நலன்களைப் பாதுகாக்க முடியும்; அதனுடைய சுதந்திரத்தைப் பலப்படுத்த முடியும் எனக் கட்சி மீண்டும் மீண்டும் கூறியது.

கடந்து சென்ற ஆண்டுகளும், சர்க்காரின் அயல்நாட்டுக் கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் கட்சியின் கொள்கை சரியானதென நிருபித்துள்ளன. யுத்த அபாய நெருக்கடி, இந்திய சுதந்திரத்திற்கெதிரான ஏகாதிபத்தியப் பயமுறுத்தல், நம் நாட்டிலும் உலகிலும் ஜனநாயக, சமாதான சக்திகளின் வளர்ந்து வரும் பலம் என்ற பகைப்புலனில் இந்திய அரசாங்கமானது மேலும் மேலும் ஏகாதிபத்திய அரசுகளுக் கெதிராகச் செல்ல ஆரம்பித்தது; உலக சமாதானம், ஆசிய சுதந்திரம், ஆசிய ஒற்றுமை, இந்திய சுதந்திரம் ஆகிய இலட்சியங்களுக்காகப் பகிரங்கமாகப் போராட ஆரம்பித்தது.

யுத்தத்திற்கு எதிராக, இராணுவ ஒப்பந்தங்களுக்கு எதிராக, சமாதான உறவுகளை நிலைநாட்ட, வெகுஜன நாசகார ஆயுதங்களைத் தடைசெய்ய நடந்துவரும் இந்த உலக வியாபகமான போராட்டத்திலே, சமீப வருடங்களில் இந்தியக் குடியரசு மேலும் மேலும் அதிகமான, பெரிதும் முக்கியமானதோர் பாத்திரத்தை வகித்து வருகிறது; இந்தியாவின் இந்தப் பங்கானது அதனுடைய சர்வதேசக் கௌரவத்தைஉயர்த்தியுள்ளது; ஒவ்வொரு இந்தியனின் இதயத்திலும் தேசியப் பெருமித உணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் இந்தப் பாத்திரமானது சமாதானத்தை விரும்பும் நாடுகளின் நட்பையும், கௌரவத்தையும் தேடித் தந்துள்ளது. ஏகாதிபத்திய வாதிகளை அதிகமாகத் தனிமைப்படுத்தி யுள்ளது; ஏகாதிபத்திய நிர்ப்பந்தத்திற்கு ஆசிய நாடுகள் தரும் எதிர்ப்பை பலப் படுத்தியுள்ளது. ஒரு சுதந்திர, அரசுரிமையுள்ள குடியரசாக இந்தியா தோன்றி, சமாதான, சுதந்திர இலட்சியக் கொடியை

உயர்த்திப் பிடித்திருப்பதானது, இன்றைய உலகில் ஆழ்ந்த முக்கியத்துவம் வாய்ந்ததோர் அம்சமாகும்.

1954, ஜூன் 28ல் வெளியிடப்பட்ட நேரு-செள பிரகடனம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தொன்ருகும்; இதுதான் பஞ்சசீலக் கோட்பாடுகளை வகுத்துத் தந்தது. சகல நாடுகளுக்கிடையே இருக்கவேண்டிய பரஸ்பர உறவுகளுக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டிய இந்த ஐம்பெரும் கோட்பாடுகள், பின்பு சோவியத் யூனியனாலும், இதர பல நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன; இந்தக் கோட்பாடுகள் உலக முழுவதிலும் மிகப் பெரிய செல்வாக்கை வகிக்கின்றன.

பாண்டுங் மகாநாட்டை முன்நின்று நடத்தியவர்களுள் இந்தியாவும் ஒன்று; இந்த மகாநாடு ஆசிய-ஆப்ரிக்க ஒருமைப்பாட்டின் அணிவகுப்பாக, காலனி ஆதிக்கத்திற்கு எதிரான அணிவகுப்பாக மாறியது; சமாதானத்திற்குச் சாதகமான சக்திவாய்ந்ததோர் நடவடிக்கையாக அமைந்தது.

சோவியத் யூனியனுக்கு நேரு விஜயம் செய்த காலத்தில் அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்பானது இந்திய சோவியத் மக்களின் நட்புறவைப் பலப்படுத்தியுள்ளது; இந்தியாவிற்குத் தோழர்கள் என். ஏ. புல்கானினும், என். எஸ். குருஷ்சேவும் விஜயம் செய்த காலத்தில் இந்த நட்புறவு மறக்க முடியாத காட்சிகளாக வெளிப்பட்டது; இந்த நட்புறவானது உலக சமாதானத்திற்கு வேண்டிய மிக முக்கியமான அம்சமாகத் திகழ்கிறது. இந்த நட்புறவும், இதிலிருந்து உருவான ஒப்பந்தங்களும், மாறுபட்ட அரசியலமைப்புகளை உடைய நாடுகளுக்கிடையே எத்தகைய உறவுகள் நிலை நாட்டப்பட முடியும் என்பதற்கான ஒரு மாதிரியாக, இன்றைய உலகில் விளங்குகின்றன.

ஒரு பக்கத்தில் இந்தியாவுக்கும், மற்ரெரு பக்கத்தில் சோவியத் யூனியன், சீனு ஆகிய இரு நாடுகளின் தலைமையிலுள்ள சோஷலிஸ உலகத்திற்குமிடையே ஏற்பட்டுள்ள புதிய உறவு உலக சமாதானத்தை மட்டும் பலப்படுத்தக்கூடிய அம்சமல்ல. உலக விவகாரங்களில் இந்தியாவின் நிலையையும், இந்திய சுதந்திரத்தையும், பொருளாதாரத்தையும் பலப்படுத்திக் கொள்வதற்கான முக்கியமான சாதனமாகும் அது; காஷ்மீர், கோவாப் பிரச்னைகள்பற்றி சோவியத் தலைவர்கள் விடுத்த பிரகடனங்கள், சோவியத் யூனியனுடனும் இதர சோஷலிஸ்ட் நாடுகளுடனும் இந்தியா செய்துள்ள பொருளாதார ஒப்பந்தங்கள் ஆகியவை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

முன்பின் முரணில்லாத ஒரு சமாதானக் கொள்கைக்காகவும், சமாதானத்தை விரும்பும் நாடுகளுடன் நேச உறவு கொள்வதற்காகவும் போராடிவந்த கம்யூனிஸ்ட் கட்சி இந்த சாதனைகளை வரவேற்று ஆதரிக்கிறது; இந்த சாதனைகளை மேலும் முன்கொண்டு செல்வதற்காக மக்களைத் தட்டி எழுப்பி, ஒன்றுதிரட்ட அது தொடர்ந்து முயற்சி செய்யும்.

சமாதானக் கொள்கை ஒரு உண்மையான தேசியக் கொள்கையாகும்; ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையாகும்; நமது ஜனநாயக இயக்கத்தின் பாரம்பரியங்களைத் தொடர்ந்து, முன்கொண்டு செல்லக்கூடிய ஒரு கொள்கையாகும். இந்தியாவிற்குள்ள உலக கௌரவத்தை உயர்த்தி, நமது சுதந்திரத்தைக் கெட்டிப்படுத்த விரும்பும் நமது மக்களின் ஒவ்வொரு பகுதியையும், ஒவ்வொரு வர்க்கத்தையும் ஒன்றுபடுத்தும் விரிந்த ஒற்றுமையை கட்டுவதற்கான அடிப்படையை இந்தக் கொள்கைக்கான போராட்டம் ஏற்படுத்துகிறது.

இந்தியாவிலும் ஆசியாவின் இதர பல நாடுகளிலும் சமாதானத்திற்காக நடக்கும் போராட்டமானது, சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும், ஆசிய ஒற்றுமையைக் கட்டுவதற்கும், யுத்தக் கூட்டணிகளில் ஒன்று திரண்டுள்ள ஏகாதிபத்திய யுத்த வெறியர்களின் நிர்ப்பந்தத்தை எதிர்த்தும் நடக்கும் போராட்டத்துடன் இணைந்து பிணைந்து வருகின்றது. சமாதானத்திற்கான போராட்டமானது, ஏகாதிபத்திய முகாம் முழுவதற்கும் எதிரான போராட்டத்தைப் பிரம்மாண்டமான முறையிலே பலப்படுத்துகிறது.

அத்துடன் சமாதானத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கும், ஆசிய ஒற்றுமைக்கும், சோவியத் யூனியன். சீனு ஆகிய நாடுகளுடன் நேச உறவு கொள்வதற்கும் நடக்கும் பொதுவான போராட்டத்தில் பல்வேறு கட்சிகளின் மக்கள் ஒன்று சேர்வதானது வெகுஜன ஜனநாயக இயக்கத்தைப் பலப்படுத்தியுள்ளது; அதன் வீச்சைப் பெருக்கி உள்ளது; மக்களின் உடனடி நலன்களைப் பாதுகாப்பதற்காக மக்கள் நடத்தும் போராட்டங்களின் வளர்ச்சி, வெகுஜன ஸ்தாபனங்களின் வளர்ச்சி பொதுவான ஜனநாயக இயக்கம் பலமடைவது ஆகியவை எல்லாம் சமாதானத்திற்கான இயக்கத்திற்கு இன்னும் அதிகமான பலத்தைக் கொடுக்கிறது.

சமாதானத்திற்கும், தேச சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் நடக்கும் போராட்டங்களும், ஜனநாயக உரிமைகளுக்காகவும், மக்களின் ஜீவாதார நலன்களுக்காகவும் நடக்கும் போராட்டங்க

ளும் ஒன்ருேடு ஒன்று பிரிக்க முடியாதபடி இணைந்து, ஒன்றை ஒன்று பலப்படுத்துவதை வாழ்க்கை காண்பித்துள்ளது.

தங்களின் கொள்கைக்கு அடிபணிந்து செல்ல இந்தியா தயாராயில்லை என்பதைக் கண்டு பிரிட்டன் உள்ளிட்ட சகல ஏகாதிபத்திய அரசுகளும் இந்தியாவைச் சுற்றி வளைத்துப் பய முறுத்தி, அடிபணியச் செய்ய சமீப வருடங்களில் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்கின்றனர்.

பிரிட்டனின் தலைமையில் உருவாயுள்ள பாக்தாத் ஒப்பந்த மானது இந்தியப் பாதுகாப்புக்குத் தீவிரமானதோர் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. சீயாட்டோ கூட்டணியின் உறுப்பினர்களும், காமன்வெல்த் நாடுகளுமான ஆஸ்திரேலியா, நியூஜிலந்து, பிரிட்டன் ஆகிய நாடுகள், சீயாட்டோ அரசுகளின் கூட்டம் ஒன்றில், காஷ்மீர்பற்றிய பாகிஸ்தானின் கோரிக்கைக்கு ஊக்க மளித்தனர். கோவாப் பிரச்னையில் போர்ச்சுகலுக்குச் சாதக மாகப் பிரிட்டன் தலையிடுகிறது; இந்தியப் பிரதேசத்தைப் போர்ச்சுக்கல் ஆக்கிரமித்திருப்பதைஆதரிக்கிறது. காமன்வெல்த் உறவின் சாதகங்கள்பற்றி இந்திய சர்க்கார் பேசிய போதிலும், பிரிட்டனும் காமன்வெல்த் நாடுகளும் இவ்விதம் இந்திய நலன் களுக்கு விரோதமாக வேலை செய்கின்றன.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், இந்தியாவிற்கு எதிராக இன்னும் மிகப் பகிரங்கமான தலையீட்டுக் கொள்கையை அனுஷ் டிக்கின்றனர்; இந்திய சுதந்திரத்திற்கு ஊறுவிளைவிக்கத் தங்களா லியன்ற அனைத்தையும் செய்கின்றனர். அமெரிக்க-பாகிஸ்தான் இராணுவ ஒப்பந்தமானது, இந்தப் பிராந்தியத்தில் உள்ள இரா ணுவத் தளவாடங்களின் தராதர நிலையை மாற்றச் செய்த பகி ரங்க முயற்சியாகும்; இந்தியாவிற்கெதிராகப் பாகிஸ்தானைத் தூண்டிவிட்டு, இரு நாடுகளுக்குமிடையே நெருக்கடியை உண் டாக்கச் செய்யும் பகிரங்க முயற்சியாகும். ஆசியர்களே ஆசியர் களை எதிர்த்துப் போராடச் செய்வதற்கான முயற்சி இது; எல்லை யோரங்களில் சமீப நாட்களில் நடந்துவரும் சம்பவங்களானது ஏகாதிபத்தியவாதிகள் இந்திய சுதந்திரத்திற்கெதிரான சூழ்ச்சி களில் இறங்கியுள்ளனர் என்பதை இந்திய மக்களுக்கு எடுத்துக் காட்டக்கூடிய கடும் எச்சரிக்கையாக விளங்குகின்றன.

பாகிஸ்தானை அங்கத்தினராகக் கொண்டு சியாட்டோ ஒப்பந் தத்தை உருவாக்கியது, கோவாப் பிரச்னையில் ஆத்திரமூட்டக் கூடிய முறையில் போர்ச்சுகலுக்கு ஆதரவளித்தது, காஷ்மீர் பிரச்னையில் பாகிஸ்தானுக்கு ஆதரவளித்தது ஆகியவையெல்

லாம் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவிற்கெதிராக எடுத்த ஆபத்தான இதர நடவடிக்கைகளாகும்.

நேட்டோ, சியாட்டோ மற்றுமுள்ள இராணுவ ஒப்பந்தங்களெல்லாம் இந்தியாவைச் சுற்றி இராணுவ முகாம்களை உண்டாக்கி, இந்தியாவை யுத்த முகாமில் சேர்ப்பதற்கு நிர்ப்பந்தப்படுத்தும் உத்தேசத்துடன் உருவாக்கப்பட்டவை.

இந்திய மக்கள் இந்த ஆபத்தான சம்பவங்கள் பற்றி அசிரத்தையாக இருக்கமுடியாது. இவற்றின்பால் இந்திய மக்கள் அனைவரும் கவனம் செலுத்த வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோருகிறது; இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த வளர்ந்து வரும் ஆபத்தை எதிர்த்துப் போராட அறைகூவி அழைக்கிறது.

இந்த ஆபத்தை இந்திய அரசாங்கம் பார்த்திருப்பதையும், இந்தியாவிற்கெதிரான ஏகாதிபத்திய நிர்ப்பந்தத்தையும், பயமுறுத்தலையும் எதிர்ப்பதையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

தங்களின் யுத்தக் கூட்டணிகள் மூலம் ஆசிய நாடுகளைப் பயமுறுத்தும் சூதாட்டத்தில் ஏகாதிபத்திய யுதத வெறியர்கள் தோல்விமேல் தோல்வி அடைந்து வருகின்றனர். சமாதான முகாமின் வளர்ந்து வரும் பலம், சுதந்திரத்திற்காகவும், யுத்தத்திற்கு எதிராகவும் ஏற்பட்டு வரும் ஆசிய ஒற்றுமை,ஆகியவை எல்லாம் யுத்த வெறியர்களுக்குச் சரியான அடி கொடுத்துள்ளன. சமீபத்தில் இலங்கையில் நடந்த தேர்தல்கள், அதன்பின் அங்கு ஏற்பட்டுள்ள புதிய சர்க்காரின் சமாதானக் கொள்கை, யுத்தச் சதிகளுக்கு பல மேற்கு ஆசிய நாடுகள் கொடுக்கும் எதிர்ப்பு ஆகியவையெல்லாம் குறிப்பிடத் தக்க வளர்ச்சிகளாகும்; ஏகாதிபத்திய சதிகளை முறியடிப்பது சாத்தியம் என்பதை அவைஎடுத்துக் காட்டுகின்றன; ஆசியாவில் சமாதானத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாத்துப் பலப்படுத்த முடியும் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

இந்திய அரசாங்கம் பின்பற்றி வரும் சமாதானக் கொள்கையானது, உலக மக்கள் மற்றொரு யுத்தத்தை தவிர்ப்பதற்கு உதவி செய்கிறது; அதே சமயத்தில் இந்திய சுதந்திரத்தின் எதிரிகளை முறியடிக்கவும் உதவுகிறது.

காஷ்மீர் பிரச்னையில் மக்கள் சர்வ ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோருகிறது; இந்தியாவையும் பாகிஸ்தானையும் மோதச் செய்யும் ஏகாதிபத்தியச் சூழ்ச்சி

களை முறியடிக்கவேண்டுமென்றும் கோருகிறது. எனவே காஷ்மீர் பிரச்னையைப் பேச்சு வார்த்தை மூலம் சமாதானமாகத் தீர்க்க வேண்டியது அவசரமான வேலையாகும்; இன்றுள்ள யுத்த நிறுத்த எல்லையை அடிப்படையாகக் கொண்டு, இரு நாட்டிற்கும் எல்லையைப் பிரித்து, காஷ்மீர் பிரச்னையை இந்தியாவும், பாகிஸ்தானும் தீர்க்கவேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது; இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நிலவவேண்டிய சமாதான உறவுகளின் ஒரு பகுதியாக, காஷ்மீரில் பரம்பரையாக இருந்து வந்த பொருளாதார, வர்த்தக உறவுகளை மீண்டும் நிலை நாட்டவேண்டும்.

இந்திய சர்க்காரின் இன்றைய அன்னியநாட்டுக் கொள்கை (தேசிய பூர்ஷ்வா உட்பட) இந்திய மக்கள் அனைவரின் நலனுக்கும் உகந்ததே; இருந்தபோதிலும், ஆளும் கட்சியில் உள்ள சிலர் உட்பட முக்கியமான நபர்கள் பலர் இத்தகைய ஒரு கொள்கையின் விளைவுகள் பற்றி பீதியடைந்து வருகின்றனர்.

அரசாங்கத்தின் அன்னிய நாட்டுக் கொள்கையில் ஏற்பட்டுள்ள முற்போக்கான திசை மாற்றத்திற்குப் பெருவாரியான காங்கிரஸ்காரர்களிடையே நல்லதோர் ஆதரவு உள்ளது; எனினும் சில பெரும் காங்கிரஸ் தலைவர்கள் இந்திய சுதந்திரத்திற்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய ராணுவ ஒப்பந்தங்களுக்கும், ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள ஏகாதிபத்தியவாதிகளின் நடவடிக்கைகளுக்கும் எதிராக எபபொழுதுமே ஒன்றும் பேசுவதில்லை; இது முக்கியத்துவமில்லாத ஒரு விஷயம் என்று கூறமுடியாது. இன்றையக் கொள்கையை மாற்றுவதற்கும்கூட அவர்களில் சிலர் முயற்சிக்கிறார்கள். காங்கிரஸ் தலைமையானது இதர கட்சிகளுடனும், ஸ்தாபனங்களுடனும் ஒன்றுசேர்ந்து சமாதானத்திற்கான ஒரு பொது இயக்கத்தைக் கட்ட மறுப்பதால்தான், மேற்குறிப்பிட்ட ஆசாமிகளின் போக்கு பலப்படுத்தப்படுகிறது.

இவை எல்லாம் அவசரமானதொரு கடமையை நம் முன்வைக்கிறது; அரசாங்கத்தின் சமாதானக் கொள்கையை ஆதரித்துப் பலப்படுத்த, இந்திய சுதந்திரத்தையும், பந்தோபஸ்தையும் பாதுகாக்க, காங்கிரஸ் கட்சி உட்பட சகல சக்திகள், ஸ்தாபனங்கள், கட்சிகள் ஆகியவற்றின் ஒன்றுபட்ட தேசிய இயக்கத்தை ஆரம்பித்துக் கட்டிவளர்க்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இன்றுள்ள நிலைமையானது சர்வஜாக்கிரதையான கண்காணிப்பின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்துகிறது; தொழிலாளிவர்க்கம், விவசாயிவர்க்கம், இதர ஜனநாயக மக்கள், அவர்

களின் ஸ்தாபனங்கள் ஆகியோர் இந்த இயக்கத்தைக் கட்டுவதில் முன்னிருந்ததைவிடத் தீவிரமான பங்கு கொள்ளவேண்டியதின் அவசியத்தையும் அதிகப்படுத்தியுள்ளது.

பிரிட்டிஷ் காமன்வெல்த்திலிருந்து வெளியேறுவது ; காமன் வெல்த்தில் அங்கம் வகிப்பதனல் இருக்கக்கூடிய அரசியல், இரா ணுவ உறவுகளை முறித்துக்கொள்வது ஆகியவற்றிற்கான போராட்டத்தைப் பலப்படுத்துவதானது, சுதந்திரம், ஆசிய ஒற் றுமை, சமாதானம் ஆகிய இலட்சியங்களுக்கு இன்றியமையாத தாகும்.

ஆசிய, ஆப்ரிக்க மக்களின் பிரதான எதிரிகளில் ஒன்று பிரிட்டன்; உலக சமாதானத்தின் பிரதான எதிரிகளுள் ஒன்று. சைப்ரஸ் நாட்டு மக்களின் சுதந்திரப் போராட்டத்தை இரத்தத் தில் மூழ்கடிக்க முயற்சிசெய்யும் நாடு பிரிட்டன்; இத்தகைய நாட்டின் தலைமையின்கீழ் உள்ளது காமன்வெல்த்; அதில் இந்தியா அங்கம் வகிப்பது இன்றைய உலக அரசியலில் இந்தியா வுக்குள்ள பாத்திரத்திற்கு முரணானதாகும் ; யுத்தத்தை எதிர்க்கும் அதன் கொள்கைக்கு ஒவ்வாததாகும்; ஆசிய ஒற்றுமைக் கொள் கைக்கு முரண்பட்டதாகும் ; சுதந்திரத்திற்காகப் போராடும் நாடு களுக்கு ஆதரவு அளிக்கும் கொள்கைக்கு இணங்காததொன்ரு கும். அத்துடன் காமன்வெல்த்தில் அங்கம் வகிப்பதானது நமது வெளிநாட்டுக்கொள்கையை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியச் செல்வாக் குக்கு உட்படுத்துகின்றது ; மலேயாவிற்குக் கூர்க்கத் துருப்புகள் செல்வதற்குத் தொடர்ந்து வசதிகள் அளிக்கப்படுவதில் இதைக் காணலாம்; நமது ராணுவத்திற்கு வேண்டிய கருவிகள், தளவா டங்களுக்காக ஏகாதிபத்தியவாதிகளைச் சார்ந்திருப்பதிலும் இது வெளிப்படுகிறது.

சமாதானம், தேச சுதந்திரத்தின் பாதுகாப்பு ஆகியவற்றைப் பொறுத்தவரை, கீழ்க்கண்ட தேசவியாபகமான இயக்கங்களுக் காக, மிக விரிந்த அளவிலே மக்களைத் திரட்டி, ஒன்றுபடுத்துவது தான், கம்யூனிஸ்ட் கட்சியின் கடமையாகும் :—

(i) யுத்தத்திற்கு எதிராக; வெகுஜன நாசகார ஆயுதங்களான அணுகுண்டு போன்ற ஆயுதங்களைத் தடைசெய்வதற் காக ; ஆயுதபரிஹரணத்துற்காக ;

(ii) இராணுவ ஒப்பந்தங்களை, குறிப்பாக சீயாட்டோ, பாக்தாத் ஒப்பந்தங்களை எதிர்க்க;

(iii) ஆசிய ஒற்றுமையைப் பலப்படுத்த ; ஆசிய, பசிபிக் பிராந் தியத்திற்கான ஒரு கூட்டு சமாதான உடன்படிக்கைக் காக ;

(iv) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் மக்கள் சீனக் குடியரசுக்குள்ள சட்டபூர்வமான உரிமையைப் பெறச்செய்ய; பஞ்சசீலத்தின் அடிப்படையில் சர்வதேசப் பிரச்னைகளிலும், பொருளாதார, கலாச்சாரத் துறைகளிலும், சோவியத் யூனியனுடனும், சீனவுடனும் நட்புறவையும், ஒத்துழைப்பையும் பலப்படுத்த;

(v) ஏகாதியபத்தியத்திற்கெதிரான காலனிமக்களின் போராட்டத்திற்குப் பூரண ஆதரவு கொடுக்க;

(vi) கோவாவை விடுதலை செய்வதற்கான சக்திவாய்ந்த நடவடிக்கைகளுக்காக;

(vii) பாகிஸ்தானுடன் உள்ள உறவுகளை அபிவிருத்தி செய்வதற்காக; சமாதான, நேசபூர்வமான பேச்சுவார்த்தைகள்மூலம் தகராறுக்கிடமான பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள; ஒரு யுத்தமறுப்பு ஒப்பந்தத்திற்காக; பிரிவினையால் சீரழிந்து கிடக்கும் இந்திய-பாகிஸ்தான் பொருளாதார உறவுகளை மீண்டும் நிலைநிறுத்த; நம்மிரு மக்களுக்குமிடையே பரஸ்பரம் சாதகமான உறவுகள் நிலவுவதற்குக் குறுக்கே நிற்கும் முட்டுக்கட்டைகளைத் தகர்த்தெறிய; அவர்களின் சகோதர உறவுகளைப் பலப்படுத்தக்கூடிய கலாச்சார உறவுகளையும், இதர உறவுகளையும் பெருக்கி வளர்க்க;

(viii) பிரிட்டிஷ் காமன்வெல்த்திலிருந்து வெளியேறுவதற்காக.

## 2. அரசாங்கத்தின் பொருளாதார, அரசியல் கொள்கைகளின் விளைவுகள்

சோஷலிஸம் இன்று ஒரு உலக அமைப்பாக மாறியுள்ளது; கன இயந்திரங்களிலும், தொழில் நுணுக்க அறிவிலும் ஏகாதிபத்தியவாதிகளின் ஏகபோக உரிமையை இந்த அமைப்பு உடைத்தெறிந்துள்ளது; வளர்ச்சியில் பின்தங்கிநிற்கும் நாடுகளுடன் அது தன் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளத் தயாராயிருக்கிறது; பரஸ்பர அனுகூலம், சம அந்தஸ்து என்ற அடிப்படையில் அது வர்த்தகம் செய்யத் தயாராயுள்ளது; மற்றொரு பக்கத்தில் ஏகாதிபத்தியம் பலவீனமடைந்து வருகிறது; அதனுடைய காலனி அமைப்பு சிதைந்து வருகிறது; இத்தகைய ஓர் உலகச் சூழ்நிலையில், பொருளாதாரத் துறையில் பின்தங்கி நிற்கும் நிலை

யையும், ஏகாதிபத்திய வாதிகளை சார்ந்திருக்கும் நிலையையும் அகற்ற அபரிமிதமான வாய்ப்புகள் இந்திய மக்கள்முன் உள்ளன; சுதந்திரமான பொருளாதார வளர்ச்சிப் பாதையில் துரிதமாக முன்னேற முடியும்; நாட்டின் தொழில் வளர்ச்சியை, மக்களின் வாழ்வு செழிப்பதை உறுதி செய்யமுடியும்.

ஆனல் இந்த சாத்தியப்பாடுகளை யெல்லாம் பூரணமாக நடைமுறையில் கொண்டு வருவதற்கு, நமது நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகளை ஒன்றுபடுத்திப் பலப்படுத்தியாக வேண்டும்; சென்ற காலக் காலனி ஆட்சி விட்டுச் சென்ற பாரம்பரியங்களை எதிர்த்தும், மக்களுக்கும் நாட்டுக்கும் உகந்த சரியான கொள்கைக்காகவும் வெகுஜன இயக்கங்களையும், போராட்டங்களையும் நடத்த வேண்டும். இதைச் செய்வதற்கு, அரசாங்கத்தின் உள்நாட்டுக் கொள்கைகளைப் புரிந்து, பகுத்தாராய வேண்டுவது அவசியமாகும்; நாட்டிற்கும், மக்களுக்கும் அவை உண்மையில் என்ன விளைவுகளைக் கொண்டுவரும் என்பதைப் பரிசீலனை செய்தாக வேண்டும்.

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களும், சிந்திரியில் உள்ள உர உற்பத்தித் தொழிற்சாலையும், விவசாய உற்பத்திக்கு உதவி செய்துள்ளன. நல்ல பருவ மழை கணிசமான அளவு உதவி செய்ததனல், உணவுப் பண்டங்களின் உற்பத்தியும், இயந்திரத் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்களான பருத்தி சணல் போன்றவற்றின் உற்பத்தியும் பெருகியுள்ளது. இவையெல்லாம் தேசத்திற்கு கணிசமான பெரிய லாபமாகும். உணவுப் பொருட்கள், பருத்தி, சணல் ஆகியவை இறக்குமதி செய்யப்படுவது கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளது; இதன்மூலம் நமக்கு அந்நிய நாட்டுச் செலாவணியில் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று நீர்மின்சார சக்தியின் வளர்ச்சியும் ஒரு முக்கியமான லாபமாகும் இது தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மின்சார சக்தித் தேவையைப் பூர்த்தி செய்கின்றது; அதுமட்டுமின்றி வேறு நீர்ப்பாசன வசதிகளில்லாத பல பிராந்தியங்களிலே, விவசாய உற்பத்திக்காகப் பூமிக்கு அடியிலிருக்கும் தண்ணீரை சரிவரப் பயன்படுத்தவும் பெரிதும் உதவி செய்யும்.

சமூக அபிவிருத்தித் திட்டம், தேசிய விஸ்தரிப்புத் திட்டம், ஆகிய இரண்டும், கிராமங்களில் ரோடு போடுதல், கிணறுகள் வெட்டுதல் போன்ற காரியங்களைச் செய்வதன் மூலம், நீண்டகாலமாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த கிராம மக்களின் ஆரம்பத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. சமூக அபிவிருத்தித் திட்டம் அமு

லில் உள்ள பிராந்தியங்களில், நில அபிவிருத்திக்காகக் கொடுக்கப்படும் உரத்திற்கான கடன் போன்ற பல கடன் தொகைளெல்லாம், விவசாயிகள் மத்தியிலுள்ள பணக்காரப் பகுதிகளுக்குத்தான் பிரதானமாகச் சாதகமாக உள்ளன.

இயந்திரத் தொழிலுக்குத் தேவையான பருத்தி, சணல் போன்ற பல மூலப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பு; பல அணைக்கட்டுகள் கட்டப்பட்டது; அரசாங்கத்தால் நடத்தப்பட்ட இதர நிர்மாண நடவடிக்கைகள் ஆகியவற்றுடன், அரசாங்கம் பின்பற்றிய கொள்கைகள் ஆகியவற்றின் விளைவாக இயந்திரத் தொழில் உற்பத்தி பெருகியுள்ளது; 1951-ஐ 100 ஆகக் கொண்டு பார்த்தால், 1955-ல் தொழில் உற்பத்திப் புள்ளியானது, 125·7 ஆக உயர்ந்துள்ளது.

நாட்டிற்கு இத்தகைய பலன்களெல்லாம் கிடைத்தபோதிலும்கூட, தேசப் பொருளாதாரமானது ஓர் சர்வாம்சரீதியில் பலப்படுத்தப்படவில்லை. பெருவாரியான மக்களின் வாழ்க்கைத் தரம் இன்னும் கீழான நிலையிலேயே உள்ளது. ஒரு பின்தங்கிய நாட்டின் பொருளாதார அம்சங்களெல்லாம் இன்னும் தொடர்ந்து காணப்படுகின்றன.

நாட்டைத் தொழில் மயமாக்குவதற்கு அடிப்படையாக வேண்டிய கன இயந்திர, அடிப்படைத் தொழில்களை முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறுவவில்லை.

இரண்டாவதாக, இன்றுள்ள இயந்திரங்களை அதிகமாகப் பயன் படுத்தியதால்தான் உற்பத்தி பிரதானமாக அதிகரித்துள்ளதே தவிர, புதிய இயந்திரங்களைப் புகுத்தியதால் அல்ல. அது மட்டுமின்றி பல இயந்திரங்கள் பூரணமாக வேலை செய்யவும் இல்லை.

மூன்றாவதாக, தொடர்ந்து இன்னல்களுக் குள்ளாகியிருக்கும் சிறிய, மத்தியத் தொழில்களின் சீரழிவின்மூலமே பெரிய தொழிற்சாலைகள் உற்பத்தியைப் பெருக்கமுடிந்துள்ளன.

நான்காவதாக, நமது பொருளாதாரத்தில் இயந்திரத் தொழிலுக்குள்ள தராதர விகிதத்தைத் திட்டம் அபிவிருத்தி செய்துவிடவில்லை.

நில உறவுகளைப் பொறுத்தவரை, சட்டபூர்வமாக இருந்த நிலப்பிரபுத்துவ முறையான ஜமீந்தாரி ஜாகீர்தாரி முறையானது பல இராஜ்யங்களிலே ஒழிக்கப்பட்டுள்ளது. ஜமீந்தார்களுக்கு மிகப்பெரும் தொகை நஷ்டஈடாகக் கொடுக்கப்பட்டது; செழிப்பான பெரும் நிலப்பரப்புகள் அவர்களிடம் விட்டுவைக்கப்பட்டுள்

ளன; இருந்தபோதிலும்கூட இந்த நடவடிக்கையானது சட்ட பூர்வமாக இயங்கிவந்த நிலப்பிரபுக்களின் அதிகாரத்தைத் தடை செய்துள்ளது; பழையகால நிலப்பிரபுத்துவச் சுரண்டலைக் குறுக்கியுள்ளது.

நிலச்சீர்திருத்தங்களுக்கான சில விரிந்த கோட்பாடுகளை முதல் ஐந்தாண்டுத் திட்டம் கொடுத்திருந்தது ஐந்தாண்டு காலத்திற்கு குத்தகை விவசாயிகளுக்குக் குடிவார உரிமையை நிர்ணயிப்பது; இந்த விவசாயிகள் நிலச்சுவான்தார்களுக்குக் கொடுக்கவேண்டிய குத்தகைப்பங்கை, மொத்த உற்பத்தியில் 20 முதல் 25 சதவீதமாகக் குறைப்பது; நிலஉடமைக்கு வரம்பு கட்டுவது ஆகியவையும் இந்த சீர்திருத்தங்களுள் அடங்கி யிருந்தன.

குத்தகைப் பங்கைக் குறைத்து குடிவார உரிமையை அளிப்ப தற்கான சட்டபூர்வமான நடவடிக்கைகள் இன்னும் பல இராஜ் யங்களில் எடுக்கப்படவில்லை. அத்தகைய நடவடிக்கைகள் எடுக் கப்பட்ட இடங்களில்கூட, அந்தச் சட்டங்களிலே, பாதிக்கப்படு பவர்கள் தப்பித்துக்கொள்வதற்கான பல அம்சங்களும் உள்ளன; அத்துடன் இவற்றை அமுலுக்குக் கொணடுவரும் பொறுப்பு அதி கார வர்க்கத்தைச் சேர்ந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது; இந்த அதிகாரிகளோ பலவிதமான உறவுகளின் காரண மாக நிலப்பிரபுக்களுடன் பலமான பிணைப்புடையவர்கள்; இதன் விளைவாக, பரந்த பகுதிகளிலே இந்நடவடிக்கைகள் அமுலாக்கப் படவில்லை.

பெரும்பாலான இராஜ்யங்களில் நில உடமைக்கு இன்னும் வரம்பு கட்டப்படவில்லை; அவ்விதம் வரம்பு கட்டப்பட்ட இராஜ்யங் களில் கூட, அச் சட்டங்கள் தயாரிக்கப்படும் முறையின் காரண மாக, விநியோகத்திற்காக மிகக் குறைந்த அளவு நிலமே கிடைத் துள்ளது.

ஆனல் இத்தகைய சீர்திருத்தங்களைப்பற்றி பேச ஆரம்பித்த உடனே எல்லா இராஜ்யங்களிலும் பெருத்த அளவில் நிலவெளி யேற்றம் ஏற்பட்டுள்ளது; இதற்கு இராஜ்ய அரசாங்கங்களின் மறைமுக ஆதரவு உண்டு. நிலப்பிரபுத்துவ நலன்கள் ஆதிக்கம் வகிக்கும் இராஜ்ய சர்க்கார்கள் இவற்றிற்கு ஊக்கமும் அளித்தன.

நீர்ப்பாசனத் திட்டங்களைத் தொடர்ந்து, மிக உயர்ந்த அபி விருத்தி வரிகளும், தண்ணீர் வரிகளும், விதிக்கப்படுகின்றன. அத்துடன் இப்பிராந்தியங்களில் புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங் களாக்க மிகப் பெரிய அளவு பணத்தைச் செலவிடவேண்டியிருக் கிறது; இவற்றின் காரணமாக ஏற்படக்கூடிய தாங்கமுடியாத

செலவைச் சரிக்கட்ட இயலாத விவசாயிகள் தங்கள் நிலங்களை விற்கவேண்டி வந்துள்ளது. உயர்ந்துகொண்டே போய்க் கொண்டிருக்கிற, நீதிக்குப் புறம்பான, விவசாயிகளின் கடன்பளு வைக் குறைக்க எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. தங் களுடைய உற்பத்திப் பண்டங்களின் விலைவாசிகளில் ஏற்படும் தீவிரமான ஏற்றத் தாழ்வுகள் விவசாயிகளின் இன்னல்களை மேலும் அதிகமாக்குகின்றன.

பூரணமான குடிவாரப் பாதுகாப்பு உறுதி செய்யப்படாத வரை, குத்தகைப் பங்கைக் குறைப்பது சம்பந்தமான சட்டங்களை விவசாயிகள் பயன்தரத்தக்க முறையில் உபயோகப்படுத் திக் கொள்ள முடியவில்லை; இதை அனுபவம் காட்டியுள்ளது. இன்றுள்ள விவசாயச் சட்டங்களை அமுல் நடத்துவதுகூட விவ சாய இயக்கத்தின் பலத்தையும், விவசாயிகளின் ஒற்றுமையையும் பிரதானமாகப் பொறுத்திருக்கிறது என்பதையும் அனுபவம் காட்டியுள்ளது.

தொழிலாளி வர்க்கத்தின் நிலையும் இத்திட்ட காலத்தில் மோசமாகத்தானிருக்கின்றது. தொழிற்சாலைகளின் உற்பத்திப் பெருக்கமானது, தொழிலாளி வர்க்கத்தைச் சுரண்டும் அளவை அதிகப்படுத்தியதன் மூலம்தான் பெறப்பட்டுள்ளது.

ரேஷனலைசேஷன் திட்டங்கள், கடும் உழைப்பு ஆகியவற் றின் மூலம் உற்பத்தித்திறன் 44 சத விகிதம் உயர்ந்துள்ளது. இதன் விளைவாகத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலா ளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது; ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் ஆட்குறைப்பையும், வேலையில்லாத் திண்டாட் டத்தையும் எதிர் நோக்கினர். வேலையிலீடுபட்டுள்ள தொழிலா ளர்களின் உற்பத்தித் திறன் 44 சத விகிதம் உயர்ந்தபோதிலும் கூட, அவர்களின் உண்மையான சம்பளம், யுத்த முற்கால மட் டத்தைத்தான் எட்டிப் பிடித்துள்ளது.

மேலும், பல தொழிற்சாலைகளில், குறிப்பாக, சிறிய, மத்தியத் தொழிற் சாலைகளில் சம்பளவெட்டும் ஏற்பட்டுள்ளது. பெரும் தொழில்களில் போனஸ் குறைக்கப்பட்டுள்ளது. உணவு தானி யங்களின் விலை வீழ்ச்சியைத் தொடர்ந்து தொழிலாளர்களின் பஞ்சப்படி குறைக்கப்பட்டுள்ளது.

கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள தொழிலாளிகள், கைத்தொழில் செய்பவர்கள், மத்தியதர வர்க்கத்தினர் ஆகியோ ரிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை கடுமை யாகியுள்ளது.

இவ்விதம் மக்களின் வாழ்க்கை நிலையில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி எதுவும் ஏற்படவில்லை; மாறாக விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், தொழிலாளிகள், மத்தியதர வர்க்கத்தினர் ஆகியோரின் நிலை இன்னும் மோசமாகியுள்ளது; ஆனால், அதே சமயத்தில், இந்தத் திட்டம் அமுலாக்கப்பட்ட காலத்தில், ஏகபோக முதலாளிகள் மிகப்பெரிய கொள்ளை லாபமடித்துள்ளனர். இந்திய, பிரிட்டிஷ் ஏகபோக முதலாளிகள் இருவரின் லாபமும் அதிகரித்துள்ளது. திட்ட ஆரம்பத்திற்கு முதல் வருடமான 1950-ல் 318 கோடி ரூபாய்களாக இருந்த தொழிற்சாலைகளின் லாபமானது, 1954-ல் 511 கோடி ரூபாய்களாக உயர்ந்துள்ளதிலிருந்து இதைக் காணலாம்; ஆனால், இந்தக் காலத்தில் தொழிலாளர்களின் சம்பளமானது 193 கோடி ரூபாய்களிலிருந்து 207 கோடி ரூபாய்களாகத்தான் உயர்ந்துள்ளது; சிப்பந்திகளின் சம்பளம் 39 கோடியிலிருந்து 42 கோடியாகத்தான் உயர்ந்துள்ளது. அதாவது மொத்தத் தொழில் உற்பத்தியின் வருமானத்தில் ஏகபோக முதலாளிகளின் பங்கானது 57 சதவீதத்திலிருந்து 67 சதவீதமாக உயர்ந்துள்ளது; ஆனால், தொழிலாளிகள் இதர சிப்பந்திகள் ஆகியோரின் பங்கானது 43 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாகக் குறைந்துள்ளது.

இந்த லாப அதிகரிப்புப் போக்கானது 1955-ம் ஆண்டிலும் தொடர்ந்து இருக்கிறது.

இத்தகைய வளர்ச்சிக்கு இந்திய மக்கள் மிகப்பெரிய பரிசைக் கொடுக்க வேண்டியிருந்தது. விலைவாசிகளிலுள்ள மிகப்பெரிய ஏற்றத்தாழ்வுகள், உயர்ந்துகொண்டே போகும் விவசாயக் கடன்கள், கொள்ளை வட்டி, தொழிலாளிகள்மீது திணிக்கப்படும் அதிகப்படியான வேலைப்பளு, அவர்களின் வேலை நிலைமைகளின்மீது தாக்குதல், உயர்ந்துகொண்டே போகும் வேலையில்லாத் திண்டாட்டம், மக்கள்மீது திணிக்கப்படும் வரிப்பளு ஆகியவை ஆண்டுதோறும் உயர்ந்துகொண்டே போகின்றன. ஆனால், மற்றொரு பக்கத்தில், ஏகபோக முதலாளிகளின் லாபம் மிக உயர்ந்துள்ள காலத்தில், அவர்களின்மீது விதிக்கப்படும் நேரடியான வரிகளான வருமான, கம்பெனி வரிகள் போன்றவை மிகத் தீவிரமாகக் குறைந்துள்ளன.

இந்த விளைவுகளெல்லாம் ஏதோ தற்செயலாக நிகழ்ந்தவை அல்ல. அவை முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படைக் கொளகைகளின் தவிர்க்க முடியாத விளைவுகளாகும். பூர்ஷ்வாக்கள் தலைமைச் சக்தியாக உள்ள பூர்ஷ்வா - நிலப்பிரபுக்களின் அரசாங்கமானது இந்தியாவில் முதலாளித்துவத்தை

வளர்க்க முயற்சி செய்தது. ஆனால், விவசாயிகள்மீதுள்ள பளு வைக் கணிசமான அளவு குறைக்கக்கூடிய தீவிரமான விவசாய சீர்திருத்தங்கள் செய்வது; அதன்மூலம் நிலையான வளரும் உள் நாட்டு மார்க்கெட்டை ஏற்படுத்துவது என்ற முறையில் அல்ல இந்த முயறசி செய்யப்பட்டது; நிலப்பிரபுத்துவத்துடன் சமரசம் செய்துகொண்டும், அவர்களின் நலன்களைப் பாதுகாத்தும்தான் இதைச் செய்ய முயற்சித்தது.

எனவேதான், ஜமீந்தார்களுக்கு மிகப்பெரிய நஷ்டஈட்டை உறுதி செய்தது; ஏராளமான பிரதேசங்களை, சொந்த நிலம் என்ற பேரால் அவர்கள் வைத்துக்கொள்ள அனுமதித்தது. நிலச்சுவான்தார்கள் விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்றுவதற்கு, சட்டத்தையும், அமைதியையும் நிலைநாட்டுகிறோம் என்ற பேரால் தனது அடக்குமுறை இயந்திரம், போலீஸ் ஆகியவற்றை நிலச்சுவான்தார்களுக்குக் கொடுத்து உதவியுள்ளது. இவற்றின் மூலமாகவும், இரசாயன உர வினியோகம், நீர்ப்பாசன வசதிகள் போன்ற இதர நடவடிக்கைகள் மூலமாகவும் நிலப்பிரபுத்துவ உறவுகளை மாற்றி, விவசாயத்துறையில் முதலாளித்துவத்தை வளர்க்க முயற்சித்தது.

மூலதனம் கொடுப்பது, மூலப்பொருட்கள் வினியோகம், போக்குவரத்து வசதிகள், ஏற்றுமதி, இறக்குமதி லைசென்ஸ் கொடுப்பது போன்ற நடவடிக்கைகள் எல்லாம் பிரதானமாக ஏக போக முதலாளிகளுக்குச் சாதகமான முறையிலே இந்தச் சர்க்காரால் நடத்தப்படுகின்றன.

தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இந்தச் சர்க்கார் பிரிட்டிஷ் மூலதனத்தைத் தாக்க முயற்சிக்கவில்லை; மாறாகக் கன இயந்திரப் பொருட்களுக்கும், தொழில் நுணுக்க அறிவுக்கும் ஏகாதிபத்தியவாதிகளை நம்பிக்கொண்டிருக்கிறது; தனியார் தொழில் துறையில் அன்னிய மூலதனத்தை வரவேற்கிறது. இதற்காக அன்னிய ஏகபோக முதலாளிகளுக்கு, இந்தியர் யாருக்கும் கொடுக்காத சலுகைகளைக் கொடுக்கவும் அரசாங்கம் தயங்கவில்லை.

நம் நாட்டிலிருந்து அன்னிய முதலாளிகள் தங்களின் லாபத்தைத் தங்குதடையின்றி ஏற்றுமதி செய்யவும், மூலதனத்தைத் திருப்பி எடுத்துச்செல்லவும் இந்தச் சர்க்கார் அனுமதித்தது; ஆனால், அந்த ஏகாதிபத்திய சக்திகளோ நமக்குக் கன இயந்திரங்களையோ, தொழில் நுணுக்க அறிவையோ கொடுத்துவிடவில்லை. இந்தக் கொள்கையின் தவிர்க்க முடியாத விளைவாக

இந்தச் சர்க்கார் நமது ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்திற்கு ஏகாதிபத்திய மார்க்கெட்டையே சார்ந்திருந்தது; நமது அந்நிய நாட்டு வர்த்தகத்தின் போக்கை மாற்றி, சோவியத் யூனியனுடனும், சோஷலிஸ்ட் மார்க்கெட்டுடனும் அது வியாபாரம் செய்ய மறுத்தது.

இத்தகைய ஒரு கொள்கையினால் எதிர்பார்த்த விளைவுகள் ஏற்படவில்லை. தொழில் வளர்ச்சிக்காக ஏகாதிபத்தியவாதிகள் மூலதனத்தைக் கொண்டு வந்து குவித்துவிடவில்லை; இந்தியாவிற்கு வேண்டிய கன இயந்திரப் பொருட்களையும் அவர்கள் நமக்குக் கொடுக்கவில்லை. இந்த நம்பிக்கைகளெல்லாம் தகர்ந்து விட்டதோடு மட்டுமல்ல; முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஆழமாக ஆரம்பித்தவுடனே இந்திய மார்க்கெட்டிலும், வெளியிலுள்ள ஏற்றுமதி மார்க்கெட்டிலும், இந்திய முதலாளிகள், ஏகாதிபத்திய வட்டாரத்தின் கடுமையான போட்டியை மேலும் மேலும் எதிர்நோக்கவேண்டி வந்தது.

அத்துடன், இந்திய வெளிநாட்டு வியாபாரத்தின்மீது தங்களுக்குள்ள பிடிப்பைப் பயன்படுத்திக்கொண்டு, ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாமீது தங்களின் வியாபார நிபந்தனைகளைத் திணித்தனர். இதன் மூலம் மக்களின் கஷ்டங்களை மேலும் அதிகப்படுத்தினர். இந்திய மக்கள் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டதன் விளைவாக வந்த லாபத்தை ஏகாதிபத்தியவாதிகள் ஏற்றுமதி செய்ய அரசாங்கத்தின் கொள்கைகள் அனுமதித்தன.

இந்தக் கொள்கைகளெல்லாம் நாட்டின் நலன்களுக்கும் மக்களின் நலன்களுக்கும் விரோதமானவை; அதனால்தான் அவை நிறைவேற்றப்படும் காலத்தில் மக்களின் எதிர்ப்புத் தோன்றியது—வேலைப்பளு கடுமையாக்கப்படுவதையும், ஆட்குறைப்பையும் எதிர்த்துத் தொழிலாளிகள் போராடினர்; நிலவெளியேற்றம், புதிய வரிகள், தங்களின் பண்டங்களுக்குக் கிடைக்கும் மிகக் குறைந்த விலைகள் ஆகியவற்றை எதிர்த்து விவசாயிகள் போராடினர்; ஜீவனச் சம்பளத்திற்காகவும் நிலத்திற்காகவும் விவசாயத் தொழிலாளிகள் போராடினர்; மனிதத்தன்மையுடன் வாழக்கூடிய வாழ்க்கை வசதிகளுக்காக மத்தியதர வர்க்கச் சிப்பந்திகள் போராடினர்; கல்விக் கட்டணம் உயர்ந்துகொண்டே போவதை எதிர்த்தும், கல்லூரிகளின் உரிமைக்காகவும் மாணவர்கள் போராடினர்; பிரஜா உரிமைகளுக்காக சகல வர்க்கத்தைச் சேர்ந்த மக்களும் போராடினர்.

இந்தப் போராட்டங்களெல்லாம், பல சந்தர்ப்பங்களில், பல

வேறு கட்சிகளின்கீழ் திரண்டுள்ள மக்களை ஒன்றுபடுத்தியது; பொதுவான வெகுஜன ஸ்தாபனங்கள் வளர்வதற்கு உதவி செய்தது; மிக விரிந்த அளவிலே பொதுஜன அனுதாபத்தைப் பெற்றது; இப்போராட்டங்களுக்கு ஆதரவான அனுதாபப் போராட்டங்களும் நடைபெற்றன. இவையெல்லாம் மக்களின் உணர்வை உயர்த்தியது; அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கெதிராகவும், வசதிக்காரக் கும்பலின் தாக்குதல்களுக்கெதிராகவும், அவர்களின் அணியைத் திருப்பியது; பல இடங்களில் ஏகபோக முதலாளிகள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தி, முக்கியமான சலுகைகளைப் பெற்றுத் தந்துள்ளது.

அரசாங்கமானது மக்களின் இந்தப் போராட்டங்களின்பால் ஒரு குரோத மனப்பான்மையைக் கொண்டிருந்தது; ஆனால் அதே சமயத்தில், வசதிக்காரக் கும்பலுக்குப் பலமான ஆதரவைக் கொடுத்தது. மோசமாகிக் கொண்டுவரும் வாழ்க்கை நிலைமைகளை எதிர்த்து எங்கெல்லாம் மக்கள் போராடினார்களோ, அங்கெல்லாம் அப்போராட்டங்களை கடுமையாக நசுக்கத்தான் அரசாங்கம் முயற்சி செய்தது. இவ்விதம் மக்களின் வாழ்க்கைத் தரத்தின்மீதும், அவர்களின் ஜனநாயக உரிமைகள்மீதும் தாக்குதல் தொடுத்ததுதான், அரசாங்கத்தினுடைய கொள்கைகளின் விளைவாயிற்று.

எனவே, நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துக்கட்டாமல், பிரிட்டிஷ் மூலதனத்தின் பிடிப்பையும், லாபத்தையும் தாக்காமல், ஏகாதிபத்தியவாதிகளைச் சார்ந்துகொண்டு, ஏகபோக மூலதனத்தின் லாபப் பேராசையை நம்பிக்கொண்டு, தேசப் பொருளாதாரத்தை வளர்க்க முயன்ற முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன்களெல்லாம், ஒரு பலவீனமான அரசியல், பொருளாதார அடிப்படையைத்தான் கொண்டுள்ளன.

நிலையான, தொடர்ந்த முன்னேற்றத்தை அடைவதற்கும்; நமது நாட்டின் மிகப்பெரிய மனித சக்தியையும், உற்பத்தி சாதனங்களையும் திறமையுடன் பயன்படுத்துவதற்கும்; தேசப்புனர் நிர்மாண வேலைகளில் பயன்தரத்தக்க முறையிலே பொதுஜனங்கள் பங்கு கொள்வதற்கும் வேண்டிய சூழ்நிலைகள் இன்னும் உருவாக்கப்படவில்லை. அவை இனிமேல்தான் உருவாக்கப்பட வேண்டும்.

## 3. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நகல் பிரேரணைகள்

நிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்திய சக்திகளுக்கும், இந்திய முதலாளி வர்க்கம் உள்ளிட்ட சகல இந்திய மக்களுக்கு மிடையேயுள்ள முரண்பாடுதான், இந்திய சமுதாயத்திலுள்ள பிரதான முரண்பாடாகும். சுதந்திரம் பெற்ற பின்பு அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு வெகுஜன எதிர்ப்புத் தீவிரமாக வளர்ந்தது; சென்ற பொதுத் தேர்தல்களில் இந்த எதிர்ப்பு மிகத் தீவிரமான முறையில் வெளியிடப்பட்டது; இத்தகைய எதிர்ப்புத் தோன்றுவதற்கு மேற்கூறிய முரண்பாடு பெருமளவுக்குக் காரணமாகும்; அந்த முரண்பாட்டின் பிரதிபலிப்புத்தான் இந்த எதிர்ப்பு.

இந்திய அரசாங்கம் தேச சுதந்திரத்தையும், தேசப் பொருளாதாரத்தையும் பலப்படுத்தத்தான் விரும்பியது; ஆனல் அது நடைமுறையில் பின்பற்றிய கொள்கைகள் அன்னிய மூலதனத்திற்குப் பாதுகாப்பும் சலுகைகளும் அளித்தது; நிலப்பிரபுத்துவத்திற்குக் கடிவாளமிட்டு, அதை மாற்றும் காலத்திலேயே, அதனுடன் கூட்டுச் சேர்ந்து, அதற்குச் சலுகைகள் கொடுத்தது. தொழிலாளி வர்க்கத்தையும், பொது மக்களையும் கொள்ளையடித்து லாபம் திரட்ட ஏகபோக முதலாளிகளுக்கு அது பூரண உரிமை தந்தது. ஜனநாயக இயக்கத்தை நசுக்குவதற்கும் முயற்சி செய்தது.

எனவே, இந்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட முதல் ஐந்தாண்டுத் திட்டம் அமுலாக்கப்பட்டதானது, இந்திய சமுதாயத்திலுள்ள மேற்கூறிய அடிப்படை முரண்பாட்டைக் குறைக்கவில்லை. மாருக, அம்முரண்பாடு மேலும் கூர்மையாகியுள்ளது. இந்நிலையில் சோஷலிஸக் கருத்துக்கள் பரவுவதானது, குறிப்பாக சோவியத் யூனியன், சீனமக்கள் குடியரசு ஆகியவற்றின் சாதனைகளானது நமது நாட்டு மக்களிடையே ஆழமானதோர் செல்வாக்கை வகிக்கின்றன. ஆழ்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சிகள் அவர்கள் மனத்தில் கொழுந்துவிட்டெரிகின்றன; தேசப் புனர்நிர்மாணம் வேண்டுமென்ற மிகப் பெரிய ஆவலால் அவர்கள் உந்தித் தள்ளப்படுகின்றனர்.

இத்தகைய தேசிய, சர்வதேசிய வளர்ச்சிகளின் விளைவாகவும்; சுதந்திரத்தைப் பலப்படுத்துவதற்காகவும், தீவிர சீர்திருத்தங்கள் கொண்டுவருவதற்காகவும், மக்களின் வாழ்க்கைநிலையில் அபிவிருத்தி காண்பதற்காகவும் வளர்ந்துவரக்கூடிய ஜனநாயக

இயக்கத்தின் காரணமாகவும்; இந்தியாவை ஒரு சுதந்திரமான முதலாளித்துவ நாடாக வளர்க்க இந்திய முதலாளி வர்க்கம் ஆசை கொள்வதாலும்; முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிடைத்த அனுபவங்களாலும், நிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்திய சக்திகளுக்கும், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சித் தேவைகளுக்கு மிடையே மோதுதல்களும், முரண்பாடுகளும் வளர்ந்துள்ளன.

இந்திய அரசாங்கத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்குமிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளிலும், மோதுதல்களிலும் இது பிரதிபலிக்கிறது.

இவற்றுடன், விவசாய, தொழில் உற்பத்திப் பெருக்கத்தின் விளைவாக தேசப் பொருளாதாரமும், இந்திய முதலாளிவர்க்கத்தின் நிலையும் தராதரத்தில் பலப்பட்டுள்ளது; இதன் விளைவாக இந்தியா வெளி நாடுகளுக்குக் கொடுக்கவேண்டிய கடன் நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது; ஸ்டெர்லிங் கடன் கணிசமான அளவு குறைந்துள்ளது; இவையெல்லாம் சேர்ந்து அரசாங்கத்தின் கொள்கைகளிலே பல மாற்றங்களைக் கொண்டு வந்து உள்ளன.

இந்திய இம்பீரியல் பாங்கை இந்திய அரசாங்கப் பாங்காக மாற்றியது, அரசியல் சட்டத்திற்குக் கொண்டுவந்த நான்காவது திருத்தம், ஆயுள் இன்ஷூரன்ஸைத் தேசியமயமாக்கியது போன்ற அரசாங்க நடவடிக்கைகள் மேற்கூறிய மாற்றத்திற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

ஒரு எஃகுத் தொழிற்சாலை கட்டுவதற்காக சோவியத் யூனியனுடன் செய்துகொண்ட ஒப்பந்தம்; 1955 டிசம்பரில், பொருளாதார ஒத்துழைப்புப்பற்றி நேரு-புல்கானின் விடுத்த பிரகடனம்; சோஷலிஸ்ட் முகாமிலுள்ள நாடுகளுடன் வளர்ந்துவரும் வர்த்தக உறவுகள் ஆகியவை எல்லாம், கன இயந்திரங்களுக்கும், தொழில் நுணுக்க அறிவிற்கும், பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைப் பூரணமாகச் சார்ந்திருந்த தனது பழைய கொள்கையை அரசாங்கம் கைவிட்டுவிட்டது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. நமது தொழில் வளர்ச்சிக்கு சோஷலிஸ உலகின் உதவியைப் பெறவும் அது தயாராயிருக்கிறது என்பதையும் அவை எடுத்துக்காட்டுகின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் அனுபவங்களினால் படிப்பினைகள் கிடைக்காமல் போகவில்லை. துரிதமான தொழில் வளர்ச்சி இல்லாமல், குறிப்பாக இயந்திரங்களை உற்பத்திசெய்யும்

தொழில்களும், கன இயந்திரத் தொழில்களும் இல்லாமல்; விவசாயத் தொழிலாளிகளுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் நிலவினியோகம் செய்வதைத் தீர்மானமான முக்கிய அம்சமாகக் கொண்டுள்ள தீவிரமான விவசாயச் சீர்திருத்தங்கள் இல்லாமல், இந்தியா தனது பொருளாதாரத்திலுள்ள பின்தங்கிய நிலையையும், சார்ந்திருக்கும் தன்மையையும் அகற்ற முடியாது; தனது பொருளாதாரத்தைப் புனர் நிர்மாணம் செய்ய முடியாது என்பது மிகத் தெளிவாகியுள்ளது.

இந்தியப் பொருளாதாரத்தைப் புனர்நிர்மாணம் செய்ய வேண்டுமானுல், நமது பொருளாதாரத்தில் பிரிட்டிஷ் மூலதனத்திற்கும், நிலப்பிரபுத்துவத்திற்குமிருக்கக் கூடிய கடும் பிடிப்புகளை எதிர்க்கவேண்டும்; வெறுக்கத்தகுந்த காலனி ஆட்சி விட்டுச் சென்ற பாரம்பரியத்தை ஒழித்துக் கட்டப் போராடவேண்டும் என்பதும் முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில் மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

நாட்டைத் தொழில் மயமாக்கி, நமது பொருளாதாரத்திலே தாரதம்மியமற்ற வளர்ச்சியைக் கொண்டு வருவதற்கு, ஏகாதிபத்தையும், முதலாளித்துவ மார்க்கெட்டையும் நம்பி இருப்பதில் பயனில்லை என்பதும் இந்தக் காலகட்டத்தில் நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

ஒரு ஜனநாயகத் திட்டமானது இந்தியாவில்-பிரிட்டிஷ் மூலதனத்திற்கும், நிலப்பிரபுத்துவத்திற்குமுள்ள பிடிப்புகளை கடுமையாகத் தாக்கவேண்டும் என்பதையும் அனுபவம் மீண்டும் காட்டியுள்ளது.

நமது தேசத்தின் பொருளாதார, அரசியல் வாழ்வில் ஏகபோக மூலதனத்திற்கு இருக்கும் பிடிப்பை அத்திட்டமானது பலவீனப்படுத்த வேண்டும் விவசாய மக்கள்மீதுள்ள பளுவை அது கணிசமான அளவு குறைக்கவேண்டும். மக்களின் வாழ்க்கைத் தரத்தைத் தொடர்ந்து உயர்த்திக்கொண்டே போகவேண்டும்; வளர்ந்து செல்லக்கூடிய ஓர் உள்நாட்டு மார்க்கெட்டை அது உருவாக்க வேண்டும். ஒரு சமநிலையான வரிவிதிப்பு முறையை அது அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்; தனக்குத் தேவையான பணத்தைக் கொடுக்கும் வசதி படைத்துள்ள பகுதிகளான அந்நிய முதலாளிகள், நிலப்பிரபுக்கள், குறுநில மன்னர்கள், பெரு முதலாளிகள் ஆகியோரிடமிருந்தே பெறவேண்டும். நிலையானதோர் விலைவாசிக் கட்டுக்கோப்பை அத்திட்டம் ஏற்படுத்த வேண்டும். சுகாதாரம், வீடுகட்டுதல், கலாச்சாரம் போன்ற துறைகளில் சர்வாம்ச வளர்ச்சி ஏற்படுவதை அது

XN
N,56

சாத்தியமாக்க வேண்டும். முற்போக்கான தொழிற் சட்டங்களை அது நிறைவேற்ற வேண்டும்; ஜனநாயக, பிரஜா உரிமைகளை அளிப்பதன் மூலம் பொதுஜன ஒத்துழைப்பை உறுதி செய்ய வேண்டும்; பொதுஜன முன்முயற்சியை ஊக்குவித்துப் பெருக்க வேண்டும்.

இந்திய முதலாளி வர்க்கமும், அரசாங்கமும் சுதந்திரமான முதலாளித்துவப் பாதையில் காலெடுத்து வைத்துள்ளன; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் "பிரதான குறிக்கோளாகக்" கூறப்பட்டுள்ள, "கன இயந்திர, அடிப்படைத் தொழில்களுக்கு விசேஷ முக்கியத்துவமளிக்கக்கூடிய முறையில் தொழில்வளர்ச்சி ஏற்படுத்துவது" என்பதன் மூலம் இந்தப் போக்கு கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

திட்டக் கட்டுக்கோப்பிலே, தொழில் வளர்ச்சிக்காக ஆரம்பத்தில் வைக்கப்பட்ட பிரேரணைகள் பெரு முதலாளிகளின் நிர்ப்பந்தத்தால் பிற்போக்கான முறையிலே மாற்றப்பட்டுள்ளன; இருந்தபோதிலும்கூட, பொதுத் துறையில் (சர்க்கார் துறையில்) பெரும் தொழில்களையும், கனிப் பொருட் தொழில்களையும் வளர்ப்பதற்காக 691 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றிலே, மொத்தத்தில் 20 லட்சம் டன்கள் எஃகை உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்ற மூன்று எஃகுத் தொழிற்சாலைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இவற்றுடன், உர உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கும், பழுப்பு நிலக்கரி உற்பத்திக்கும், அடிப்படை மின்சார இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கும் திட்டமிடப்பட்டுள்ளன; ஆனால் இவைகள் கொஞ்சகாலத்திற்குப் பின்புதான் உற்பத்தியிலீடுபடும்.

தொழில் துறைக்கான இந்தக் குறிக்கோள்களெல்லாம் பூர்த்தி செய்யப்படுவதானது, கன இயந்திரங்களுக்கு, குறிப்பாக இலேசான தொழில்களுக்குத் தேவையான கருவிகளுக்கு இந்தியா வெளிநாடுகளைச் சார்ந்திருக்கும் நிலையை அகற்றிவிடும். நமது பொருளாதாரத்திலே இயந்திரத் தொழிலுக்கு உள்ள ஸ்தானத்தின் தராதர நிலையை உயரச் செய்யும்.

கிராமீய, சிறு தொழில்களுக்குப் பாதுகாப்பு அளித்து, ஊக்குவிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பெரும் தொகையும் வரவேற்கத் தகுந்த ஒரு அம்சமாகும்.

நாடு முழுவதிலும் நில உடமைக்கு வரம்பு கட்டுவது; சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொள்ளும் நிலத்தின் அளவைக் கட்டுப்

படுத்துவது; சொந்த சாகுபடிக்காத நிலத்தைக் குத்தகைதார்களிடமிருந்து பெறுவதற்கும் கட்டுப்பாடு கொண்டுவருவது போன்ற நிலச்சீர்திருத்தத்திற்கான பிரேரணைகளெல்லாம் சரியான திசைவழியில் செல்லும் ஒரு நடவடிக்கையாகும் என்பதில் ஐயமில்லை. மேலும், குத்தகைப் பங்கின் உயர்ந்தபட்ச அளவை மொத்த உற்பத்தியில் 20 சதமாகக் குறைக்கவேண்டும் என்பது பெரிதும் வலியுறுத்தப்பட்டுள்ளது; இதுவும் வரவேற்கப்படவேண்டிய ஒரு அம்சமாகும்.

இந்தப் பிரேரணைகள் எல்லாம் துரிதமாகவும், பூரணமாகவும் அமுலாக்கப்படுமேயானல், விவசாயிகளின் மீதுள்ள பளு ஓரளவு குறையும்; உள்நாட்டு மார்க்கெட் விரிவடைய உதவி செய்யும்.

எனவே, இந்தப் பிரேரணைகளை அமுலாக்கச் செய்வதற்காக விவசாய மக்களின் மிக விரிந்த ஒற்றுமையைக் கட்டுவதற்கு இந்தப் பிரேரணைகளே ஒரு அடிப்படையாக விளங்குகிறது.

திட்டக் கமிஷனின் நிலச்சீர்திருத்தப் பரிசீலனைக் குழு சமர்ப்பித்துள்ள பிரேரணைகளை மத்திய சர்க்கார் உடனடியாக அங்கீகரிக்கும்படி செய்யவும், பல்வேறு இராஜ்ய அரசாங்கங்கள் துரிதமாக அவற்றை அமுல் நடத்தும்படி செய்யவும், காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட சகல கட்சிகளிலுமுள்ள முற்போக்கான, ஜனநாயக சக்திகளை கம்யூனிஸ்ட் கட்சி திரட்ட முயலும். இந்தப் பிரேரணைகளின் அடிப்படையில் ஒன்றுபட்ட ஒரு விவசாய இயக்கத்தைக் கட்ட அது முயற்சி செய்யும்.

நீர்ப்பாசனம், மின்சார சக்தி உற்பத்தி ஆகியவற்றிற்கான திட்டங்களுக்கும்; சமூக அபிவிருத்தி, தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களுக்கும்; சுகாதாரம், கல்வி, வீடு கட்டுதல் போன்ற சமூக நலன்களுக்கான திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பெரும் தொகையானது, தேவைக்குக் குறைந்ததாக இருந்த போதிலும், வரவேற்கப்படவேண்டியதே.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமானது தொழில் வளர்ச்சியை வற்புறுத்துகிறது; தைரியமான பௌதீகக் குறிக்கோள்களை முன் வைத்துள்ளது; மற்றும் பல பயன்தரத்தக்க அம்சங்களைக் கொண்டுள்ளது; எனினும் அதில் பல தீவிரமான குறைபாடுகளும், பலவீனங்களும் இருக்கின்றன. கன இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிலுக்காக, திட்டக் கட்டுக்கோப்பு ஆரம்பத்தில் கொடுத்த பிரேரணைகளும் பெருமளவு குறைக்கப்பட்டிருப்பதானது, தொழில் வளர்ச்சியின் வேகத்தைக் குறைக்கும்; துரிதமாகத் தொழில்மயமாக்குவது என்ற குறிக்கோளை அடைவதைத் தடை செய்யும்.

திட்டக் கட்டுக்கோப்பு கொடுத்த பிரேரணைகளுக்கு மாருக, பொதுத் துறை (சர்க்கார் துறை) வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது; தனியார் துறையில் பெரும் தொழில்கள் நடத்துவதற்கு காரணமற்ற முறையில் மிக அதிகமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; இவ்விரு நடவடிக்கைகளும் ஏகபோக முதலாளிகளைப் பலப்படுத்தும்; நமது பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சியைத் தடைசெய்யும். உபயோகப் பொருட்களை உற்பத்தி செய்யும் பெரும் தொழிற்சாலைகளை நவீனமயமாக்குவதற்குப் பெரும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளதானது, வேலையில்லாத் திண்டாட்ட நெருக்கடியைத் தீவிரமாக்கும்; சிறிய, கிராமக் கைத்தொழில்களைத் தீவிரமான ஆபத்திற்குள்ளாக்கும்.

ஏகபோக முதலாளிகளுக்கு அளிக்கப்படும் இந்தச் சலுகையானது அவர்களின் நிலையைப் பலப்படுத்துவதோடன்றி, வெளிநாட்டுச் செலாவணி உட்பட நம்முடைய மூலாதாரங்கள் அனைத்தும் சிதறடிக்கப்படுவதில் கொண்டுவிடும்; இதனுல் நகல் திட்டத்தின் குறிக்கோள்கள் பூர்த்திசெய்யப்படுவது தீவிரமாகப் பாதிக்கப்படும். பொதுத்துறை, தனியார் துறைமீது ஆதிக்கம் வகிக்க வேண்டுமென்று விரும்பியபோதிலும்கூட, மேற்கூறிய நடவடிக்கையால், ஏகபோக முதலாளிகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட தனியார் துறை மொத்தத்தில் பலமடையும்.

விவசாயத் துறைக்கான பிரேரணைகளிலும் தீவிரமான பலவீனங்கள் உள்ளன. பலரகப்பட்ட நிலங்களுக்கு வரம்பு கட்டுவதின்றும் விதிவிலக்களிக்கப்படுகிறது; இது விநியோகத்திற்குள்ள நிலத்தின் விஸ்தீரணத்தை மேலும் குறைக்கிறது; (குத்தகைதார்களுக்கு நில உடமை உரிமை கொடுக்கப்படுவதற்காக) நிலச்சுவான்தார்களுக்குப் பெரிய நஷ்டஈடு கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது; உபரியாக இருக்கும் நிலங்களை விவசாயத் தொழிலாளிகள், ஏழை விவசாயிகள் ஆகியோருக்கு விநியோகம் செய்வதற்காக, அந்நிலத்திற்கு விலை கொடுக்கப்படவேண்டும்; வெளியேற்றப்பட்ட குத்தகைதார்களுக்கு, நிலங்கள் திருப்பிக்கொடுக்கப்படுவதற்கான போதிய விதிகளில்லை; எல்லாவற்றிற்கும் மேலாக இச் சீர்திருத்தங்களை அமுலாக்குவதற்காக, போதுமான அதிகாரங்களையுடைய, ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் கமிட்டிகளை நிறுவ எத்தகைய யோசனைகளும் அதில் இல்லை.

எனவே, மிக விரிந்த அளவில் விவசாயத் தொழிலாளர்கட்கும், ஏழை விவசாயிகட்கும் நில வினியோகம் செய்வதை அச் சீர்திருத்தங்கள் உறுதிசெய்யவில்லை; இதைச் செய்யாமல் நமது

விவசாயத்தில் ஒரு பெரும் எழுச்சியைக் கொண்டுவந்துவிட முடியாது; கிராமப் பகுதிகளிலே மூலதனச் சேர்க்கை ஏற்படுவதென்பது இயலாது; நமது விவசாய உற்பத்தியில் உறுதியான ஸ்திரத் தன்மை இருக்காது; உள்நாட்டு மார்க்கெட்டை விஸ்தரிக்கமுடியாது.

ஏகபோக முதலாளிகளுக்குச் சலுகைகள் அளித்து, பொதுத் துறையைக் கட்டுப்படுத்தி, நிலப்பசியால் வாடும் விவசாயிகளுக்கு பெருமளவில் நிலவிநியோகம் செய்ய மறுக்கும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமானது, வேலைகொடுக்கும் நிலையில் எவ்வித அபிவிருத்திக்கும் இடமளிக்கத் தவறியிருப்பது, ஏதோ தற்செயலாக நிகழ்ந்ததல்ல. மாறாக, வேலையில்லாத் திண்டாட்ட நிலைமையானது இன்னும் மோசமாகிவிடலாம்.

உழைப்பாளிகளுக்கு உற்சாகமூட்டி, பொதுஜனங்கள் பங்கு கொள்வதை உறுதிசெய்ய, திட்டம் எத்தகைய நடைமுறைச் செயல்களைப் பற்றியும் யோசனைகளை முன் வைக்காததும் குறிப்பிடத் தக்கது. குறைந்தபட்ச வாழ்க்கை வசதிகளைக் கொடுக்கக் கூடிய ஜீவியச் சம்பளத்திற்கு உத்திரவாதம் அளிக்கும் பிரச்னைக்கு அத் திட்டத்தில் இடமளிக்கப்படவில்லை.

இந்தியாவில் இயங்கிக்கொண்டிருக்கும் பிரிட்டன் போன்ற அன்னிய நாடுகளைச் சேர்ந்தவர்களின் கம்பெனிகளின்பால் திட்டம் கையாளும் கொள்கையானது கவலைக்கிடமானதொன்றாகும். பிரிட்டிஷ் கம்பெனிகள் பலமாக வேரூன்றியிருக்கக்கூடிய கிளைகளிலே அவற்றைத் தேசீய மயமாக்கவேண்டும் என்ற யோசனையானது அங்கீகரிக்கப்படவில்லை. நம் நாட்டில் அன்னிய மூலதனம் இயங்குவதற்கெதிரான சக்திவாய்ந்த நடவடிக்கைகள் எதையும் பற்றிய யோசனைகளை திட்டம் முன்வைக்கவில்லை. இன்றுள்ள வரி விகிதங்கள் மூலம் கிடைப்பவை போக, பிரிட்டிஷ் கம்பெனிகளின் கொள்ளை லாபம் தொடப்படமாட்டாது; நமது நாட்டிலிருந்து மிகப் பெரும் தொகையை அவர்கள் வெளியே அனுப்புவதை இன்னும் தடைசெய்யும் யோசனை இல்லை.

மாறாக, திட்ட காலத்தில் ஆண்டு தோறும் தனியார் துறையில் அந்நியர்கள் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள மூலதனமிடுவதற்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது. பிரதானப் பண்டங்களைப் பொறுத்தவரையாவது இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, பிரிட்டனுடனும் அமெரிக்காவுடனும் இன்று செய்யப்பட்டு வரும் வர்த்தகத்தின் அளவு தொடர்ந்து நடத்தப்படும் என்ற வாக்குறுதிகள் அளிக்கப் பட்டுள்ளன; இது நமது செல்வாதாரங்களை ஏகாதிபத்தியவாதி

கள் சுரண்டுவதற்கு உதவி செய்வதோடு மட்டுமின்றி, நமது நாட்டின் திட்டமிட்ட வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டை போடும். சோவியத் யூனியனுடனும், இதர சோஷலிஸ்ட் நாடுகளுடனும் வர்த்தக உறவுகள் வளருவதற்குத் தடையாக நிற்கும்.

அதே போன்று, ஜமீந்தார்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதை அனுமதித்துள்ளது; குறுநில மன்னர்களுக்கு அளிக்கப்படும் மான்யத்தை நிறுத்தவும் சர்க்கார் மறுக்கிறது குறிப்பாக, ஏக போக முதலாளிகளின் லாபத்திற்கு எவ்வித வரையறையும் விதிக்கப்படுவதில்லை; நாட்டின் புனர்நிர்மாணத்திற்கு மிகவும் அவசியமான செல்வாதாரங்களை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

வெளிநாட்டு உதவி, அதிகப்படியான வரி விதிப்பு, கட்டாய சேமிப்பு, மிகப்பெரிய பற்றுக்குறை பட்ஜெட் தயாரிப்பது போன்ற வற்றின் மூலம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான செல்வத்தைத் தேட யோசனைகள் வைக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு உதவியை மிக அதிகமாக நம்பியிருப்பது, நமது கட்டுப்பாட்டுக்குட்படாத, மிகவும் நிலையற்ற அம்சங்களைத் திட்டம் சார்ந்திருக்கவேண்டிய ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது ; அத்துடன் அதிகப்படியான வரிவிதிப்பும், கட்டாய சேமிப்பும் புதிய பொருளாதாரச் சுமைகளை மக்கள்மீது திணிக்கும்.

ஏகபோக முதலாளிகள், வர்த்தகச் சூதாடிகள் ஆகியோரின் நடவடிக்கைகளைத் தடுக்கக்கூடிய அம்சங்கள் இல்லாமல், திட்டம் பிரேரேபித்துள்ளபடி மிகப்பெரிய அளவிலே—1200 கோடி ரூபாய் வரை—பற்றுக்குறை பட்ஜெட் தயாரிப்பதானது, பணவீக்க அபாயத்தைக் கொண்டுவரும் ; பணக்காரர்களின் கையிலே மேலும் செல்வம் சேருவதற்கு வாய்ப்பை அளிக்கும். உண்மையில், 1956–57ம் ஆண்டு பட்ஜெட்டிலே முதற்பெரிய பற்றுக்குறையைக் காண்பித்த உடனேயே, பணவீக்கப் போக்குகள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன ; சென்ற இரண்டு மாதங்களில் அவசியப் பண்டங்களின் விலைவாசிகள் பெரிய அளவிலே உயர ஆரம்பித்துள்ளன. இவை எல்லாம் இப்பொழுது இருக்கும் குறிக்கோள்கள் பூர்த்தி செய்யப்படுவதை ஆபத்துக்குள்ளாக்குகின்றன ; திட்டத்தின் எதிர்காலத்தை நிலையற்றதாக்குகின்றன.

சாதாரண மக்கள்மீது சுமைகளைத் திணித்து, திட்டத்திற்குப் பணம் தயாரிக்கும் முறைக்கு நிச்சயமாக எதிர்ப்பு ஏற்படத்தான் செய்யும். எனவேதான் ஆண்டுதோறும் உயர்ந்துகொண்டே வந்துள்ள போலீஸ் இலாக்காவின் செலவில் எதையும் குறைக்க திட்ட நகல் எந்த யோசனையும் கூறவில்லை. தொழிற்சங்க உரிமை

களையும், மக்களின் ஜனநாயக உரிமைகளையும் விரிவுபடுத்த எந்த யோசனையும் முன்வைக்கப்படவில்லை. ஆனால் அதற்கு மாறாக, அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட தொழிற்சங்கத்தை சட்ட பூர்வமாகத் திணிக்க நகல் திட்டம் யோசனை கூறியுள்ளது; இத் தகைய தொழிற்சங்கம்தானே, ஏகபோக முதலாளிகளின் நலன் களுக்குகந்த, அரசாங்கத்தின் கொள்கைகளை விசுவாசமுடன் நிறைவேற்ற முடியும்.

சர்க்கார் தொழிற்சாலைகளிலும், நிர்வாகத்திலும், சுதந்திர மான தொழிற்சங்க இயக்கத்தை நசுக்க, அரசாங்க ஊழியர்களின் நடத்தைப்பற்றிய விதிகள், தேசீய பாதுகாப்பு விதிகள்போன்ற சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆளும் கட்சிக்கு மாறு பட்ட அரசியல் அபிப்பிராயங்களையுடைய தொழிலாளர்கள் பல சந்தர்ப்பங்களில் பழிவாங்குதலை எதிர்நோக்குகின்றனர்.

இவையெல்லாம், நகல் திட்டத்தில் கொடுக்கப்பட்டிருந்த பல முற்போக்கான பிரேரணைகளுக்கு அபாயத்தை விளைவிக்கின்றன. நிலச் சீர்திருத்தப் பிரேரணைகளை அமுல் நடத்தச் செய்வதற்கு ஒரு பலமான விவசாய இயக்கம் கட்டப்படாவிடில், பல இராஜ்யங் களின் அரசாங்கங்களில் பலமாக வேரூன்றியுள்ள நிலப்பிரபுத் துவ நலன்களும், அதிகாரவர்க்கத்தை சேர்ந்த அதிகாரிகளும் இப்பிரேரணைகள் அமுல் நடத்தப்படுவதைத் தடை செய்வதில் பெருமளவு வெற்றியடைகின்றனர் என்பதை ஏற்கனவே அனுப வம் காட்டியுள்ளது.

எனினும், இந்த நகல்தான் இறுதியானதென எண்ணுவது வெறும் தோல்வி மனப்பான்மையாகும். ஜனவரி மாதத்தில், ஆலோசனைக் கமிட்டியில், ஊதாப் புத்தகம் என்றழைக்கப்பட்ட திட்டக் கமிஷனின் யாதாஸ்து விவாதிக்கப்பட்ட காலத்தில், தொழில்துறைபற்றிய திட்டக்கட்டுக்கோப்பின் ஆரம்ப பிரேரணை கள் இதேபோன்று பிற்போக்குத்தனமான முறையில் மாற்றப்பட் டிருந்ததை, காங்கிரஸ்காரர்கள் உட்பட ஆலோசனைக் கமிட்டி யின் பல உறுப்பினர்கள் கடுமையாக விமர்சித்தனர் என்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

திட்டக் கட்டுக்கோப்பின் ஆரம்பப் பிரேரணைகளை மீண்டும் அங்கீகரிக்கச்செய்யப் போராடவேண்டும்; அவை பூரணமாக அமுல் நடத்தப்படுவதற்காகப் போராடவேண்டும்; முற்போக்கான நிலச்சீர்திருத்தப் பிரேரணைகளை ஜனநாயகமான முறையிலே அமுலாக்கப்படுவதற்காகப் போராடவேண்டும் இறுதியாக, நாடு துரிதமாகத் தொழில்மயமாக்கப்படுவதை உறுதிசெய்யக்கூடிய முறையில் இரண்டாவது திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்

காகப் போராடவேண்டும்; இதுதான் மிகவும் அவசியமான விஷயமாகும்.

திட்டத்திற்கு வேண்டிய பணத்தைத் திரட்டுவதுபற்றிய பிற்போக்கான அம்சங்களை நிர்த்தாட்சண்யமாக எதிர்த்து அவற்றை அகற்றவேண்டியது மிகவும் அவசியம். அதேபோன்று மக்களின் முன்முயற்சியை வளர்க்கவேண்டியதும் அவசியமாகும்; சமூக நலன்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தின்மூலம் மக்களுக்கு அதிகப்பட்ச அனுகூலம் கிடைக்குமாறு செய்ய தொடர்ந்து போராட்டத்தை நடத்தவேண்டும்; இந்த சமூக நலத் திட்டங்களை அமுல் நடத்தும்காலத்தில் அதிகாரவர்க்கப்போக்கு, ஊழல், லஞ்சம், வீண்விரயம் ஆகியவை ஏற்படாமல் தடுக்கப் போராட வேண்டும்.

திட்டத்தை உருவாக்குவது, அமுல்நடத்துவது ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரச்னை ஒவ்வொன்றிலும், ஒரு பெரிய அளவிலே, பொதுஜனத் தலையீட்டைத் திரட்டியாகவேண்டும். கொள்கைகளைப்பற்றி காங்கிரஸ் கட்சிக்குள்ளே, முரண்பாடுகள் வளர்ந்துள்ளன; மேலும் வளர்ந்துவருகின்றன; எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டில் ஜனநாயக சக்திகளின் பலம் பெருகிவருகிறது; இவற்றின் காரணமாக, மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவதற்கான மகத்தான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

## 4. அரசாங்கத்தின் கொள்கைகளும், அவற்றின்பால் கம்யூனிஸ்ட் கட்சி கடைப்பிடிக்கும் போக்கும்

திட்டத்தின் முற்போக்கான அம்சங்கள், வாய்ப்புகள், குறைபாடுகள், பலவீனங்கள் ஆகியவை எல்லாம் இந்திய அரசாங்கத்தின் தன்மையிலிருந்தும், அதன் இலட்சியங்களிலிருந்தும் எழுகின்றவைதான். இந்த அரசாங்கம் ஒரு முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ அரசாங்கமாகும்; இதில் முதலாளித்துவம்தான் தலைமைதாங்கும் சக்தி. சுதந்திரமான முதலாளித்துவப் பாதையில் இந்தியாவைக் கொண்டுசெல்வதற்கான ஆசையால் தோன்றியவை அதனுடைய கொள்கைகள்.

இந்தக் குறிக்கோளுடன்தான், நமது பொருளாதாரத்தில் பிரிட்டனுக்குள்ள பிடிப்பைப் பலவீனப்படுத்த அது முயல்கிறது. நிலப்பிரபுத்துவச் சுரண்டல் முறைகளுக்குக் கடிவாளமிட்டு, நிலப்பிரபுக்களை, முதலாளித்துவ நிலச் சுவான்தார்களாக்க முயற்சி

செய்கிறது; இதன்மூலம் கிராமப்புறங்களிலே முதலாளித்துவ ஆட்சியின் சமூக அடிப்படையாக இயங்கக்கூடிய பணக்கார விவசாயப் பகுதியை உருவாக்க முயல்கிறது.

சர்க்கார் துறையை விரிவுபடுத்தி, வளர்க்க அது முயல்கிறது; இன்றுள்ள நிலைமையில் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கே இது மிகவும் அவசியமாகும். இந்தக் குறிக்கோள்களும், அவற்றின் விளைவாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும், அரசாங்கத்தை ஏகாதிபத்தியத்துடனும், நிலப்பிரபுத்துவத்துடனும், தவிர்க்கமுடியாதபடி மோதும்படி செய்கின்றன! சில சமயங்களில் முதலாளித்துவப் பகுதிகளின் குறுகிய நலன்களோடும் மோதும்படி செய்கின்றன; ஆயுள் இன்ஷூரன்ஸைத் தேசியமயமாக்கியது இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். கொள்கைகளில் மோதுதல்கள் ஏற்படுத்துவதிலும் இது கொண்டுவிடுகிறது; தொழில்மயமாக்குவது பற்றிய பிரச்னைகளில் ஏற்பட்ட சர்ச்சை முழுவதும் இதற்கொரு சான்றாகும்.

ஜனநாயக இயக்கத்தைப் பொறுத்தவரை இம்மோதுதல்களுக்கு ஒரு முற்போக்கான முக்கியத்துவம் உண்டு. வெகுஜன நிர்ப்பந்தத்தின்மூலமும், பொதுஜன ஒற்றுமையின் பலத்தைக் கொண்டும், ஜனநாயக சீர்திருத்தங்களைச் செய்யவும், பிற்போக்கு சக்திகளுக்குச் சலுகைகள் கொடுப்பதற்கு எதிராகவும் அரசாங்கத்தை உந்தித்தள்ள மேற்கூறிய மோதுதல்கள் நல்ல வாய்ப்பை அளிக்கின்றன.

தேசப் புனருத்தாரணம் தேவை என்ற உணர்ச்சியானது இன்று மக்களிடையே பெருகிவருகிறது; அதேபோன்று வெகுஜன இயக்கமும் வளர்ந்துவருகிறது; இத்தகைய ஒரு சூழ்நிலையில் தொழில்வளர்ச்சி வேண்டும் என்பதற்காக மேலும் மேலும் செய்யப்படும் முயற்சிகளெல்லாம், மேற்கூறிய முரண்பாடுகளைக் கூர்மையாக்கத்தான் செய்யும்; இதன்மூலம் பல நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமாறுசெய்து, அதன்மூலம் நமது பொருளாதாரத்தில் பிரிட்டிஷ் மூலதனத்திற்குள்ள பிடிப்பையும், நமது அரசியல், பொருளாதார வாழ்வில் இந்தியப் பிற்போக்காளர்களுக்கிருக்கும் பிடிப்பையும் பலவீனப்படுத்துவது சாத்தியமாகும்.

இத்தகைய வளர்ச்சிகளிலே கம்யூனிஸ்ட் கட்சி பெரிதும் அக்கறை கொண்டுள்ளது; இவற்றை மேலும் வளர்க்க அது முயற்சி செய்யும்; ஏனெனில் அவை ஜனநாயக இயக்கத்தைப் பலப்படுத்த உதவிசெய்கின்றன; ஜனநாயக முன்னணியைக் கெட்டிப்படுத்தி, விரிவுபடுத்த அவை உதவிசெய்கின்றன. தேச சுதந்திரத்தையும், தேசப்பொருளாதாரத்தையும் பலப்படுத்தவும்,

ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, ஏகபோக முதலாளித்துவ நலன்களுக்கு எதிராகவும் இந்த சர்க்கார் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும், தங்குதடையற்ற பலமான ஆதரவை நாம் கொடுப்போம்.

ஆனல், ஏகாதிபத்தியத்திற்கும், இந்திய அரசாங்கத்திற்குமிடையே முரண்பாடுகள் கூர்மையாவது; நிலப்பிரபுத்துவத்திற்கும், முதலாளித்துவ வளர்ச்சித் தேவைகளுக்குமிடையே மோதுதல் முற்றுவது; இந்த மோதுதல்களிலே தனது நிலையைப் பலப்படுத்திக்கொள்ள முதலாளித்துவம் முயற்சிப்பது ஆகியவை எல்லாம், அரசாங்கத்தின் உள்நாட்டுக் கொள்கையை ஜனநாயகமான, மக்களுக்குகந்த கொள்கையாக ஏற்கனவே மாற்றச் செய்துள்ளதென்றே அல்லது தாங்களாகவே மாற்றிவிடும் என்றே கருதுவது மிகப்பெரிய தவருகும்.

ஏகாதிபத்தியத்தோடும், நிலப்பிரபுத்துவத்தோடுமட்டுமின்றி, பொதுமக்களோடு உள்ள உறவிலும் தன் நிலையைப் பலப்படுத்திக்கொள்ள முதலாளித்துவம் முயற்சி செய்கிறது ஏகாதிபத்தியத்தோடும் நிலப் பிரபுத்துவத்தோடும் தனக்குள்ள முரண்பாட்டை, மக்கள் தலையில் கைவைத்துக் தீர்க்க முயற்சிசெய்கிறது.

எனவேதான் ஒரு பக்கத்தில் முதலாளித்துவமானது ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிறது; நமது தேசப் பொருளாதாரத்தில் அதற்குள்ள பிடிப்பைப் பலவீனப்படுத்த முயல்கிறது; அதே சமயத்தில், பிரிட்டிஷ் மூலதனத்துடன் தனக்குள்ள உறவைத் தொடர்ந்து நீடித்து வருகிறது; மேலும் அன்னிய மூலதனம் நம் நாட்டில் வந்திறங்க வசதி செய்து தருகிறது.

நிலப்பிரபுத்துவத்திற்குக் கடிவாளமிட்டுப் பலவீனப்படுத்த முயலும் அதே சமயத்தில், ஜனநாயக சக்திகளுக்கு எதிராக நிலப்பிரபுக்களுடன் கூட்டணி வகிக்கிறது; அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கிறது.

நாட்டைத் தொழில் மயமாக்க எத்தனிக்கும் அதே நேரத்தில், பொருளாதார வளர்ச்சியின் சுமைகளைப் பிரதானமாக சாமானிய மக்கள் மீது திணிக்க அது முயல்கிறது.

பொதுத் துறையை விஸ்தரிக்கின்றது; ஆனல் அதோடு கூடவே ஏகபோக முதலாளிகள் தொழிலாளிகளின மீது தாக்குதல் தொடுப்பதை ஆதரிக்கும் கொள்கைகளைப் பின்பற்றுகிறது; ஏகபோக முதலாளிகளின் பணப்பையைப் பெருக்கச் செய்யும் பல நடவடிக்கைகளை எடுக்கிறது. அதன் மூலம், நமது வாழ்வின் முக்

கியமான துறைகளிலே தங்களுக்குள்ள பிடிப்பைப் பலப்படுத்திக் கொள்ள அவர்களுக்கு உதவுகிறது.

தேசப் புனர் நிர்மாணப் பணியிலே ஒத்துழைக்க வருமாறு மக்களை அறைகூவி அழைக்கிறது; ஆனால் அதே சமயத்தில் அதிகார வர்க்கத்தையும் பலப்படுத்துகிறது; பிரதானமாக அதையே நம்பியிருக்கிறது; ஜனநாயகத்தைவிரிவுபடுத்த மறுக்கிறது; மக்களின் வாழ்க்கை நிலைகளை உயர்த்த மறுக்கிறது. நாட்டின் சுதந்திரத்தையும், சமாதானத்தையும் எந்த வர்க்கங்கள் உறுதியாகப் பாதுகாக்குமோ, எந்த வர்க்கங்களின் முன்முயற்சியும், சிருஷ்டிப்பணியும் இல்லாமல் தேசப்புனர் நிர்மாணம் வெற்றியடைய முடியாதோ, அந்த வர்க்கங்களைப் பலவீனப்படுத்தி, விலங்கிட முயற்சிக்கும் கொள்கைகள்தான் மேற்கூறிய கொள்கைகளாகும்.

தொழில் வளர்ச்சி பற்றிய குறிக்கோள்களுக்கும், அந்தக் குறிக்கோள்களை அடையக் கடைப்பிடிக்கும் முறைகளுக்குமிடையே பெரிய வேறுபாடு உள்ளது; இந்த வேறுபாடும், மேலே குறிப்பிடப்பட்டவைகளும் சேர்ந்து நாட்டின் வளர்ச்சிப் போக்கிற்கு, தாமதமான, அரைகுறைத் தன்மையை அளிக்கின்றன; சுற்றிவளைத்துச் செல்லக்கூடிய தாக்குகின்றன; தீவிரமான மோதுதல்களையும், ஆழ்ந்த முரண்பாடுகளையும் உண்டாக்குகின்றன. இந்தியாவின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக நிற்பவைகளைத் தகர்த்தெறிவதை அவை தடுக்கின்றன. மக்களின்மீது மாபெரும் சுமைகளைத் திணிக்கின்றன; அவர்களை வறுமைப் படுகுழியில் தள்ளுகின்றன; இதன் மூலம் நிலையான, தொடர்ந்து விரிவுபடக்கூடிய உள்நாட்டு மார்க்கெட் ஏற்படுவது தடுக்கப்படுகிறது.

இந்தக் கொள்கைகளை அமுல் நடத்தும் காலத்தில், மக்களுக்குச் சில சலுகைகளையும் நிவாரணத்தையும் கொடுக்க முயற்சிக்கிறது; ஆனால் அதே சமயத்தில் அடிக்கடி அடக்குமுறை நடவடிக்கைகளையும் கையாளுகிறது. மக்களின் அன்றாடப் போராட்டங்கள் நடைபெறும் காலத்திலும், ஜனநாயகப் பிரச்னைகளுக்கான போராட்டங்கள் நடைபெறும் காலத்திலும், காங்கிரஸ் அரசாங்கமானது, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும் பகுதியைக் கைது செய்வது, தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றின் மூலம் பயங்கர நிலையை ஏற்படுத்தும் முறையையும் கையாளுகிறது.

இராஜ்யப் பிரிவினைக் கமிட்டி அறிக்கையைத் தொடர்ந்து நடைபெற்ற போராட்டங்களை மிருகத்தனமாக நசுக்கியது; பாட்னா

மாணவர்களைச் சுட்டுக்கொன்றது; டார்ஜீலிங் தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது; மக்களின் அன்றுடப் போராட்டங்களை யொட்டிப் பல இடங்களில் வெகுஜன ரீதியில் கைது செய்தது ஆகியவைகள் எல்லாம், ஜனங்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காகவும், உரிமைகளுக்காகவும் செயலில் இறங்கும் பொழுது எத்தகைய கோரத்தன்மையை அரசாங்கம் எடுக்கிறது என்பதைப் பட்டவர்த்தனமாக்குகின்றன. இந்த அடக்குமுறை நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவது, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, விரிவுபடுத்தப் போராடுவது, ஆகியவை எல்லாம் மக்களை ஒன்றுபடுத்துவதற்காக நடத்தப்படும் போராட்டத்தின் பிரிக்கமுடியாத ஒரு பகுதியாகும்.

இத்தகைய ஒரு சூழ்நிலைமையில், சமாதானத்திற்காகவும், சுதந்திரத்தைப் பாதுகாத்துப் பலப்படுத்தவும், தேசப் புனர்நிர்மாணத்திற்காகவும், மக்களின் ஜீவாதார நலன்களைப் பாதுகாக்கவும், ஜனநாயகத்தை விஸ்தரிக்கவும் தேசிய ஒற்றுமையைக்கட்டும் கடமையானது மிக மிகச் சிக்கலான ஒரு கடமையாகும்.

சமாதானத்திற்கான போராட்டத்தையும், அதை மேலும் பலப்படுத்துவதற்கான முயற்சிகளையும் பொறுத்தவரை, அரசாங்கத்தின் கொள்கையை ஆதரிக்கவேண்டும்.

ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றின் பிடிப்பைப் பலவீனப்படுத்தி, ஏகபோக முதலாளிகளுக்குக் கடிவாளமிட்டு, தேசப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அனைத்தையும் ஆதரிக்கவேண்டும்.

தொழில்வளர்ச்சியின் வேகத்தைத் துரிதப்படுத்தவும் அது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமாறு செய்யவும் அரசாங்கத்தின்மீது நிர்ப்பந்தம் கொண்டுவரவேண்டும்.

அன்னிய மூலதனம், நிலப்பிரபுத்துவம், ஏகபோக முதலாளித்துவ நலன்கள் ஆகியவற்றோடு சமரசம் செய்துகொள்வது, அவற்றிற்கு சலுகைகள் கொடுப்பது ஆகியவற்றைத் தீவிரமாக முறியடிக்கவேண்டும்.

மக்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கத்திற்கு எதிரான உறுதியான போராட்டத்தை நடத்தவேண்டும்.

அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளைக் கடுமையாக எதிர்த்து முறியடிக்கவேண்டியது அவசியமாகும்; ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து மேலும் விரிவுபடுத்தவேண்டியதும் அவசியமாகும்.

இத்தகைய ஒரு புரட்சிகரமான, வளைந்து கொடுக்கக்கூடிய கொள்கையைக் கம்யூனிஸ்ட் கட்சி பின்பற்றுவதற்கும், ஜனநாயக இயக்கத்தை நிர்மாணித்து, முன்னணிப்படையாக விளங்கவேண்டிய அதற்குரிய உரிமைப்பாத்திரத்தை கட்சி வகிப்பதற்கும், அது ஒரு சுதந்திரமான தேசிய சக்தியாக முன்வரவேண்டும். இன்றைய சர்க்காரைப் பொறுத்தவரை, அது ஒரு எதிர்க்கட்சியாக இயங்கவேண்டும்.

நாட்டின் நலன்களையும், மக்களின் நலன்களையும், வழிகாட்டியாகக்கொண்டு, கம்யூனிஸ்ட் கட்சியானது, அரசாங்கத்தின் சமாதானப் பாதுகாப்புக் கொள்கைக்குப் பூரண ஆதரவைக் கொடுக்கும்; அதேபோன்று இந்தியப் பொருளாதாரம் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருக்கும் நிலையைக் குறைக்க அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பூரண ஆதரவளிக்கும். ஆனால், அந்நிய மூலதனத்திற்கு அரசாங்கம் அளிக்கும் ஆபத்தான சலுகைகளைக் கட்சி எதிர்க்கும்; இந்தச் சலுகைகளைக் குறைப்பதற்காக மக்களைத் திரட்டும்.

நிலப்பிரபுக்களுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கும்; அது பிரேரேபித்துள்ள நிலச்சீர்திருத்தங்களைக் கட்சி ஆதரிக்கும். இராஜ்ய அரசாங்கங்களிலுள்ள நிலப்பிரபுத்துவ நலன்களும், அவர்களோடு பிணைப்புள்ள அதிகார வர்க்கப் பகுதிகளும் இந்தச் சீர்திருத்தங்களுக்கு உலை வைப்பதை எதிர்க்கும்; விவசாய மக்கள், அவர்களின் ஸ்தாபனங்கள் ஆகியோருடைய ஜனநாயகபூர்வமான ஒத்துழைப்புடன், இந்தப் பிரேரணைகளை முரணின்றி அமுல் நடத்தச் செய்யவும் கம்யூனிஸ்ட் கட்சி விவசாயிகளையும், பொதுமக்களையும் திரட்டும்.

ஏகபோக முதலாளிகள் தொழிலாளி மக்கள்மீது தாக்குதல் தொடுத்து, அதன்மூலம் அவர்கள்மீது புதிய சுமைகளைச் சுமத்துவதை ஆதரிக்கும் அரசாங்கத்தின் கொள்கைகளைக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாக எதிர்த்துப் போராடும். ஜனநாயக உரிமைகளையும், பிரஜா உரிமைகளையும் நசுக்கி, தொழிற்சங்க இயக்கத்தைச் சீர்குலைத்து, தொழிற்சங்க உரிமைகளை மறுக்கும் ஜனநாயக விரோதக் கொள்கைகளை கட்சி எதிர்த்துப் போராடும். இந்தக் கொள்கைகளை முறியடித்து, அவற்றை மாற்றச்செய்யவும், மக்களுக்கு நிவாரணம் பெறுவதற்கும், அவர்களின் வாழ்க்கை நிலையிலே அபிவிருத்தி காண்பதற்கும், தொழிலாளிகள், விவசாயிகள், இதர ஜனநாயகப் பகுதிகள் ஆகியோரைக்கொண்ட வெகுஜன இயக்கத்தைக் கட்சி திரட்டும்.

# 5. அடிப்படை இலட்சியம் மக்கள் ஜனநாயகம்

உடனடிக் கோரிக்கைகளுக்காகவும், முற்போக்கான கொள்கைகளுக்காகவும் மிகப்பெரிய வெகுஜன ஒற்றுமையைக் கட்டும் பணியை கம்யூனிஸ்ட் கட்சி மிகவும் வற்புறுத்தும்; ஆனால் அதே சமயத்தில், நமது பொருளாதாரத்திலும், சமூக, அரசாங்க அமைப்பிலும் அடிப்படை மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டியதின் அவசியத்தையும், இந்த மாற்றங்களை நிறைவேற்றக்கூடிய ஒரு புதிய சர்க்காரை நிறுவவேண்டியதின் அவசியத்தையும், பொதுமக்கள் தங்களின் அனுபவத்தின்மூலம் புரிந்துகொள்ளுமாறு செய்யக் கம்யூனிஸ்ட் கட்சி முயற்சிசெய்யும்.

கட்சி மக்களிடத்திலே நடத்தும் பொதுவான பிரச்சாரத்திலும், தத்துவார்த்த-அரசியல் நடவடிக்கையிலும், மக்கள் ஜனநாயகத்தின் அடிப்படைக் கோஷங்களைத் திட்டமிட்டும், ஸ்தூலமாகவும், தொடர்ந்தும் பிரச்சாரம் செய்யும்; விவசாயிகளுக்கு இனமாக நிலத்தை வழங்கக்கூடிய அடிப்படை விவசாய சீர்திருத்தங்கள், பிரிட்டிஷ் மூலதனத்தைப் பறிமுதல் செய்வது, மக்கள் ஜனநாயக அரசை நிறுவுவது ஆகியவைதான் இந்த அடிப்படைக் கோஷங்கள் ; இவற்றிற்காக ஒரு மக்கள் ஜனநாயக சர்க்கார் ஏற்படுத்தப்படவேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்தும்.

இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்றிருப்பதும், இந்திய அரசில் முதலாளிவர்க்கம் தலைமைப் பாத்திரத்தை வகிப்பதும், இந்தியப் புரட்சியின் அடிப்படை இலட்சியத்தையும், அடிப்படை யுத்த தந்திரத்தையும் மாற்றிவிடவில்லை.

தொழிலாளிவர்க்கத்தின் தலைமையின்கீழ், தேசிய முதலாளித்துவம் உள்ளிட்ட சகல ஜனநாயக வர்க்கங்களையும் கொண்ட ஒரு மக்கள் ஜனநாயக சர்க்காரை ஏற்படுத்துவதன்மூலம்தான், ஜனநாயகப் புரட்சியைப் பூர்த்திசெய்யமுடியும். மக்கள் ஜனநாயக சர்க்காரானது ஜனநாயகப் புரட்சியின் கடமைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமின்றி, நாட்டை சோஷலிஸப் பாதையிலே கொண்டுவிடும்—இந்தப் பாதை ஒன்றுதான் இன்றைய சகாப்தத்தில், எந்த ஒரு நாடும் முன்னேறுவதற்கான பாதையாகும். எனவே, இன்றுள்ள நிலைமைகளில், எந்தெந்த முன்னேற்றத்தை எல்லாம் அடையமுடியுமோ, அந்த முன்னேற்றத்தை அடைவதற்காக உறுதியாகப் போராடிக்கொண்டே, கம்யூனிஸ்ட் கட்சியானது, மக்கள் ஜனநாயகத்திற்கும், சோஷலிஸத்திற்குமான வெகுஜனப் பிரசாரத்தை நடத்திக்கொண்டிருக்கும்.

## 6. ஜனநாயக மக்கள் பகுதிகளிடையே உள்ள பிளவைப் போக்குவதற்காக

கம்யூனிஸ்ட் கட்சி நாட்டுக்கு முன்னே ஒரு உடனடித் திட்டத்தை சமர்ப்பிக்கிறது. அதை அமுல் நடத்துவதின் மூலம் தேச சுதந்திரம் பலப்படும்; தேசப் பொருளாதாரம் புனர்நிர்மாணம் பெறும்; மக்களின் வாழ்க்கை நிலைமைகளில் அபிவிருத்தி ஏற்படும்; நம்முடைய பொருளாதார, அரசியல், சமூக வாழ்வில் ஜனநாயக சக்திகள் பலப்படும்.

அது தேசீய ஒற்றுமையை உறுதிப்படுத்தி, உலக விவகாரங்களில் இந்தியா மேலும் மேலும் முக்கிய பங்கை ஆற்றுவதற்கு வழிகோலும். ஆகவே, இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்வதற்கும், அதை அமுல் நடத்தும்படி செய்வதற்கும், அதையொட்டிய ஸ்தூலமான கொள்கைகள், நடவடிக்கைகள், போராட்டங்கள் ஆகியவற்றை மேற்கொள்ளும்படி செய்வதற்கும் கம்யூனிஸ்ட் கட்சி சகல தேசபக்தி மிகுந்த சக்திகளையும் ஜனநாயக சக்திகளையும் கொண்ட மிகவும் பரந்த ஐக்ய அணியைக் கட்டுவதற்குக் கம்யூனிஸ்ட் கட்சி பாடுபடும்.

அத்தகைய ஒற்றுமை அவசர அவசியமானது மட்டுமல்ல; நாட்டிலுள்ள அரசியல் நிலைமை அத்தகைய ஒற்றுமையைச் சாதிப்பதற்கு சாதகமாகவும் இருக்கிறது.

இந்தியா ஒரு உலக அரசாக செல்வாக்கடைந்திருப்பதும், உலக விவகாரங்களில் அது வகித்துவந்துள்ள பாத்திரமும் தேசபக்தி வாய்ந்த சக்திகளிடையே, உள்நாட்டுத் துறையில் துணிச்சலான, தீவிர நடவடிக்கைகளை-காலனி அமைப்பு முறையின் மிச்ச சொச்சங்களை ஒழித்துக் கட்டக் கூடியதும், ஒவ்வொருதுறையிலும் தேசிய முன்னேற்றத்தை உத்திரவாதம் செய்யக்கூடியதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற உணர்வை பலப்படுத்தியுள்ளது. நாட்டின் பொருளாதாரம் பலஹீனமாயுள்ள வரையிலும் இந்திய சுதந்திரத்திற்கு ஆபத்து நீடிக்கும் என்பது எல்லோருக்கும் தெளிவாகத் தெரிகிறது.

உலக அரங்கத்தில் ஏற்பட்டுவரும் நிகழ்ச்சிகள், சோஷலிஸ்ட் உலகத்துடன் தொடர்புகள் வளர்ந்துவருவது, சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் பிரம்மாண்டமான சாதனைகள், சீனாவின் முன்னேற்றம் ஸ்பஷ்டமாக உலக மக்களின்முன் எடுத்துக்காட்டாக விளங்கியது. ஆகியவை நம் மக்களின் மனதிலே பலமான பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. அவைகள் தீவிர

ஜனநாயக, சோஷலிஸ்ட் கருத்துக்களுக்கு ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தி வருகின்றன. தேச முன்னேற்றத்திற்கான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதற்கு ஜனநாயக சக்திகளின் ஒற்றுமையின் அவசியத்தை அவை கோடிட்டுக் காட்டுகின்றன.

இந்தியாவில் ஜனநாயக சக்திகள் பிளவுபட்டுக் கிடக்கின்றன. ஒரு பக்கத்தில் காங்கிரசைப் பின் பற்றும் ஜனநாயக சக்திகளுக்கும், மறு பக்கத்தில் காங்கிரசுக்கு எதிர்ப்பாகவுள்ள ஜனநாயகக் கட்சிகளைப் பின்பற்றும் மக்களுக்குமிடையில் உள்ள பிளவுதான் மிகவும் முக்கியமான பிளவு.

மேலும், ஜனநாயக எதிர்க் கட்சிகளே பிளவுபட்டுள்ளன. பிரதானமாக, கம்யூனிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி ஆகியவைகளைப் பின் பற்றும் மக்களே பிளவுபட்டுள்ளனர். தவிர, எந்த ஒரு அரசியல் கட்சியையும் சாராத உதிரியான ஜனங்கள் பெரிய பகுதியாகவுள்ளனர். இந்தப்பிரிவுகள் இந்திய சமூகத்திலுள்ள ஒவ்வொரு வர்க்கத்திலும் நிலை கொண்டுள்ளன.

ஆனால் சமீப காலத்தில், இந்தப் பிளவுகளைப் போக்கிக் கொள்வதற்கான பாதையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்க–பாகிஸ்தான் ஒப்பந்தத்திற்கெதிராகவும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்புத் திட்டங்களை எதிர்த்தும் நடந்த இயக்கத்திலும், சோவியத் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட பிரமாதமான வரவேற்பிலும் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த வெகு ஜனங்களும் ஒன்ருகத் திரண்டு வந்துள்ளனர்.

எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த வெகுஜனங்களிடத்திலும் ஆதிக்க வர்க்கங்களுடையவும் சர்க்காருடையவும் தாக்குதலை எதிர்ப்பதற்காகவும், தேசீயப் புனர்நிர்மாணத்திற்காகவும், சீர்திருத்தங்களுக்காகவும், ஜனநாயகத்திற்காகவும் போராடுவதற்கு ஒற்றுமை தேவை என்ற உணர்வும், விருப்பமும் வளர்ந்து வருகின்றன.

ஐக்கியப் போராட்டங்கள் தீவிரத் தன்மையிலும், வீச்சிலும் வளர்ந்து வருகின்றன.

மக்களுடைய தீவிர மனோபாவங்களையும், ஜனநாயக, ஏகாதிபத்ய-எதிர்ப்பு மனோபாவங்களையும், தேசீயப் புனர்நிர்மாணம் ஏற்படவேண்டுமென்ற அவர்களின் உணர்வையும் உபயோகப்படுத்திக் கொள்வதின் மூலமும், கடந்த காலத்தில் தனக்கு விரோதமாக இருந்த நிலப்பிரபுக்களுடனும், இதர பிற்போக்கான நபர்களுடனும் ஒற்றுமை ஏற்படுத்திக்கொள்வதன் மூலமும் காங்கிரஸ்

தன்னுடைய நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது. இதில் அதற்கு ஓரளவு வெற்றியும் கிடைத்துள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் காரணமாகக் கிடைத்த சொற்பப் பலன்கள், உணவு நெருக்கடி தளர்ந்தது, 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இயந்திரத் தொழில் வளர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்ற யோசனை, சோஷலிஸ்ட் பாணி சமூக அமைப்பு என்ற பேச்சுகள் ஆகியவை எல்லாம் மக்களிடையே நம்பிக்கையையும், பிரமைகளையும் ஏற்படுத்தியுள்ளன இவைகளையும் இத்துடன் கூடவே, இந்தியா தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கையின் காரணமாகப் பெற்றுள்ள மதிப்பையும் காங்கிரஸ் தன்னைப் பலப்படுத்திக்கொள்ள உபயோகப்படுத்துகிறது.

ஆயினும், காங்கிரஸ் இவ்வாறு தன்னை உறுதிப்படுத்துக் கொள்வதானது தேசம் பூராவிலும் ஒரே அளவாக ஏற்பட்டுவிடவில்லை. இடத்திற்கு இடம் மாறுபட்டிருக்கிறது; அரைகுறைத் தன்மை வாய்ந்தது; நிலையற்ற அஸ்திவாரத்தைக் கொண்டது—என்பதைச் சம்பவங்கள் நிரூபித்துள்ளன. பல துறைகளில் சர்க்காரின் யதார்த்த நடைமுறை, அதன் பிரகடனங்களைப் பொய்ப்பித்துள்ளன. இதுபற்றி மக்களிடையே பலத்த விமர்சனம் எழுந்துள்ளது. மக்களின் எந்த மனோபாவங்களை உபயோகப் படுத்திக்கொள்ள சர்க்கார் முயற்சி செய்கிறதோ, அந்த மனோபாவங்களுக்கே விரோதமாகவுள்ளன, சர்க்காரின் நடவடிக்கைகள். அதனுடைய வாக்குறுதிகள் மக்களிடையே என்ன நம்பிக்கைகளை ஏற்படுத்துகின்றனவோ, அந்த நம்பிக்கைகளைச் சர்க்காரின் நடவடிக்கைகள் சிதறடிக்கின்றன. அதனால் வெகுஜன எதிர்ப்பு ஏற்படுகிறது. அதனால் காங்கிரசுக்குள்ளேயே முரண்பாடுகள் தீவிரப்படுகின்றன. இதன் காரணமாக சில சமயங்களில் சர்க்காரே, தாங்கள் முன்பு எடுத்த நிலைகளிலிருந்து பின்வாங்கவேண்டியும் ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் அங்கத்தினர்களிடையிலும், காங்கிரஸ் வெகுஜனங்களிடையிலும் சமாதானம், ஏகாதிபத்திய எதிர்ப்பு மனோபாவங்கள், சோவியத் யூனியனுடனும் சீனாவுடனும் நட்புறவு, ஜனநாயக, சோஷலிஸ மனோபாவங்கள், தேசப் புனர்நிர்மாணக் கடமையை நிறைவேற்றுவதற்குத் தீவிரமான சீர்திருத்தங்கள் வேண்டுமென்ற உணர்வு ஆகியவை குறிப்பிடத்தக்க அளவுக்கு பரவி வளர்ந்துள்ளன.

தன்னுடைய இறுதி லட்சியம் சோஷலிசம் என்று காங்கிரஸ் பிரகடனப்படுத்தியிருப்பதை இந்தப் பகைப்புலனிலதான் நாம் பார்க்கவேண்டும். ஒரு புறத்தில், இது பூர்ஷ்வாக்கள் தங்கள்

கொள்கைகளின் உண்மையான தன்மையை மூடி மறைப்பதற்கா கச் செய்யப்படும் முயற்சியாகும். மக்களைத் தவறான நம்பிக்கை கொள்ளச்செய்து, அவர்களின் தீவிர மனோபாவங்களைத் தங்க ளுடைய சொந்த வர்க்க ஆட்சியை பலப்படுத்திக்கொள்வதற்காக செய்யப்படும் முயற்சியாகும். ஆனால் அதே சமயத்தில், சோஷ லிஸக் கருத்துக்களின் பால் மக்கள் மேலும் மேலும் இழுக்கப்படு வதையும், அக்கருத்துக்களின் வலிமை மேலும் மேலும் அதிகமா வதையுமே இது எடுத்துக்காட்டுகிறது. நிலைமையின் இந்த வளர்ச்சியை ஆளும் வர்க்கம் புறக்கணிக்க முடியாது. தவிர, இதனால் தீவிர விளைவுகளும் ஏற்படவிருக்கின்றன.

சோஷலிஸம்தான் எங்கள் லட்சியம் என்று செய்யப்பட் டுள்ள பிரகடனமே, மக்களைத் தீவிர மனோபாவம் கொண்டவர்க ளாக்கும் சக்தியாக வேலை செய்கிறது. காங்கிரஸ்காரர்களிடை யிலும், காங்கிரஸ்பால் அபிமானம் உடைய மக்களிடையிலும், பொதுவாக மக்களிடையிலும் தீவிர இடதுசாரிப் போக்கை இது பலப்படுத்துகிறது. ஜனநாயக சீர்திருத்தங்கள் வேண்டுமென்ற கோரிக்கைக்கு இது அதிக உத்வேகமளிக்கிறது.

சர்க்காரின் கொள்கைகளில் தேச சுதந்திரத்தையும், தேசப் பொருளாதாரத்தையும் பலப்படுத்துவதும், மக்களுக்கு நன்மை பயப்பனவுமாகிய கொள்கைகளை காங்கிரஸ்காரர்களில் பெருவாரி யானவர்கள் உற்சாகமாக ஆதரிக்கும் அதே சமயத்தில் சர்க்கா ரின் ஜனவிரோத ஜனநாயக விரோதக் கொள்கைகளை அவர்கள் மேலும் மேலும் கண்டிக்கவும் ஆரம்பித்துள்ளனர். சோஷலிஸம் என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ள லட்சியத்திற்கும், யதார்த்த நடைமுறைக்கும் உள்ள வேறுபாட்டையும் அவர்கள் விமர்சனம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

காங்கிரசின் பல அங்கத்தினர்களும், காங்கிரஸைப் பின்பற் றும் வெகுஜனங்களில் பலரும் சர்க்காரின் ஜனநாயக விரோதக் கொள்கைகளையும் வார்த்தையளவில் மட்டும் எதிர்க்கவில்லை; அதற்கு மேலும் சென்று, காங்கிரஸுக்கு வெளியிலுள்ள கட்சிக ளுடனும், வெகு ஜனங்களுடனும் கைகோர்த்துப் பொதுவான போராட்டங்களில் ஈடுபடவும் செய்திருக்கிறார்கள்.

கோவாப் பிரச்னை, மொழிவாரி ராஜ்யப் பிரச்னை, ராஜ்யங் களை இணைக்கும் பிரச்னைக்கு எதிர்ப்பு; அதிக வரிச் சுமைக்கு எதிர்ப்பு; அதேபோல பிரஜா உரிமைகளுக்கான போராட்டங் கள், ஆகியவற்றிலும் வலிமைபொருந்திய ஒன்றுபட்ட இயக்கங் கள் நடந்துள்ளன. இவைகளில் காங்கிரஸ் அங்கத்தினர்களும்

காங்கிரஸ் வெகு ஜனங்களும் முக்கியமான பங்கு வகித்துவந்துள்ளனர்.

பாராளுமன்றத்திலும், ராஜ்ய சட்டசபைகளிலும் தேசப் புனர் நிர்மாணம் சம்பந்தப்பட்ட பல பிரச்னைகளில் இன்று பல காங்கிரஸ்காரர்கள் ஜனநாயக எதிர்க்கட்சிகள் எடுத்துப் பேசும் அதே கருத்துக்களை எடுத்துச் சொல்லியுள்ளார்கள். அவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டின் விளைவாக, தாங்கள் விரும்பியபடி ஓட்டு அளிக்கமட்டுந்தான் அவர்களால் முடியவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி ஆகிய முக்கியமான ஜனநாயகபூர்வமான எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமை அவசியம் என்ற மனோபாவம் வளர்ந்துள்ளது. அதன் காரணமாக மக்களின் உரிமைகளைத் தற்காத்துக் கொள்வது சம்பந்தமான பிரச்னை, பிரஜா உரிமைகள், கோவா விடுதலை, மொழிவாரி ராஜ்யங்கள், தேர்தல்கள் ஆகிய பல பிரச்னைகளில் ஒன்றுபட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த ஜனநாயக மக்கள், தனிநபர்கள் ஆகியவர்களைப் பிரித்துவைத்திருந்த மதிற்சுவர்கள் மெதுவாகத் தகர்ந்து வருகின்றன. ஒருபுறத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மறுபுறத்தில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட்கட்சி ஆகியவற்றுக்கு மிடையிலும், ஒருபுறத்தில் காங்கிரசிற்குள்ளிருக்கும் ஜனநாயக சக்திகளுக்கும் மறுபுறம் காங்கிரசுக்கு வெளியிலுள்ள ஜனநாயக சக்திகளுக்குமிடையிலும் தொடர்புகள் வளர்ந்துள்ளன.

நாட்டின் எல்லா பாகங்களிலும் மக்களின் போராட்டங்கள் வளர்ந்துவந்திருக்கின்றன; அவை காரணமாக வெகுஜன ஒற்றுமை மேலும் மேலும் பரந்த அளவில் ஏற்பட்டு வருகின்றது. அவை மக்களின் உணர்வின்மீது வலிமையான பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. பிற்போக்கான கொள்கைகளுக் கெதிராகவும், நடவடிக்கைகளுக்கெதிராகவும் மக்களின் வளர்ந்துவரும் கண்டனத்திற்கும், எதிர்ப்பு உணர்ச்சிக்கும் ஸ்தூலமான உருவம் கொடுத்துள்ளன. இதனால் ஒற்றுமை வளர்கிறது; மக்கள் விரைவில் தீவிர மனோபாவம் கொள்ளச் செய்கிறது.

சமீபகாலத்தில் நாட்டின் பல பாகங்களில், தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியப் போராட்டங்கள் பெரிய அளவில் நடைபெற்றுள்ளன. இந்தப் போராட்டங்களின்போது, பல்வேறான தொழிற் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளிகளும், எந்த சங்கத்திலும் சேராத பெருந் தொகையான தொழிலாளிகளும், தங்க

ளுடைய பொதுவான நல உரிமைகளைக் காப்பதற்காக ஐக்கியப் பட்டனர்; முதலாளிகளுக்கு எதிராகவும், சர்க்காரின் அடக்கு முறை நடவடிக்கைகளுக் கெதிராகவும் வீராவேசமாகப் போராடி யுள்ளனர்.

இந்தப் போராட்டங்களின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், ஐ. என். டி. யூ. சி.யைப் பின்பற்றும் தொழிலாளி களும், பல ஐ. என். டி. யூ. சி. சங்கங்களும் இவற்றில் பங்கெடுத் துக் கொண்டுள்ளன! இந்தப் போராட்டங்களுக்குப் பரந்த ஜனநாயக மக்கட் பகுதியினர் பொதுவான அனுதாபத்தையும் ஆதரவையும் நல்கியுள்ளனர். பல இடங்களில் இவற்றின் காரணமாக முக்கியமான வெற்றிகளையும் பெற்று, ஒற்றுமையின் சக்தியை எடுத்துக் காட்டியுள்ளனர்.

தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்கள் பொருளாதாரப் பிரச்னைகளை மட்டும் பொறுத்ததாயில்லை. கோவா விடுதலைக்கான இயக்கத்திலும், மொழிவாரி ராஜ்யங்களுக்கான போராட்டத்திலும், பிரஜா உரிமைகளுக்கான போராட்டத்திலும் பல ஸ்தலங்களில் தொழிலாளி வர்க்கம் ஒரு முக்ய பாத்திரத்தை வகித்துள்ளது. இது எல்லா இதர வர்க்கங்களையும், பகுதிகளையும் ஆகர்ஷித்து, பொதுஜன இயக்கத்தைப் பெரிய அளவுக்கு பலப்படுத்தியுள்ளது.

நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவதை எதிர்த்தும், வரி உயர்வுச் சுமையை எதிர்த்தும், நிலத்திற்காகவும் விவசாயிகள் நடத்திய உறுதியான போரட்டங்கள், போதிய கூலிக்காகவும், நிலத்திற்காகவும் விவசாயத் தொழிலாளிகள் நடத்திய போராட் டங்கள், இவைகளுடன் கூடவே நாட்டில் தீவிர எண்ணங்களும், ஜனநாயக மனோபாவங்களும் வளர்ந்தது—ஆகியவை காரணமாக பல வெற்றிகள் ஏற்பட்டன என்பது மட்டுமல்ல; மேலும் இவை காங்கிரசுக்குள்ளேயே ஒரு பிரதிபலிப்பை ஏற்படுத்தியுள்ளன. 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் விவசாயிகள் சம்பந்தப்பட்ட பிரரேபணைகளிலும், நிலச் சீர்திருத்தக் கமிட்டியின் யோசனைகளி லும் இதன் பிரதிபலிப்பைக் காணலாம்.

இவைகளெல்லாம் ஜனநாயக இயக்கத்திற்கு மிகமிக முக்யத் வம் வாய்ந்த நிகழ்ச்சிகளாகும். இவை மிகப் பெரிய சாத்தியப் பாடுகளை ஏற்படுத்தியுள்ளன. இந்திய மக்களின் மிகப்பரந்த ஒற்றுமையை உருவாக்குவதற்கான நிலைமைகளை இவை ஏற்படுத் தியுள்ளன.

இன்றுள்ள நிலைமையில் இந்த ஒற்றுமை, எல்லாக் கட்சி களிலுமுள்ள தேசபக்திவாய்ந்த சக்திகள், ஜனநாயக சக்திகள்,

ஆகியவற்றின் ஒற்றுமையாகவும், முன்னேற்றம் விரும்புகிற எல்லோருடைய ஒற்றுமையாகவும்தான் இருக்கமுடியும். இந்த ஒற்றுமை, சர்க்காரின் முற்போக்கான கொள்கைகளைப் பலப்படுத்தவும், அவற்றை மேலும் முன்னெடுத்துச் செல்வதை நோக்கியும் செலுத்தப்படவேண்டும். அதே சமயத்தில் உள்நாட்டுத் துறையில் இன்னும் பிரதானமாக உள்ள ஜன-எதிர்ப்பு, ஜனநாயக-எதிர்ப்புக் கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் எதிர்த்துப் போராடி, அவைகளைத் திருத்தவும், மாற்றவும் அந்த ஒற்றுமை உபயோகப் படுத்தப்படவேண்டும். நம்நாட்டின் நன்மைக்காகவும், நம் மக்களின் நன்மைக்காகவுமான கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளும்படி செய்யவும் இந்த ஒற்றுமை பயன்படுத்தப்படவேண்டும். இடதுசாரி சக்திகளின்பால் மக்களை இட்டுச் செல்வதற்கான ஒற்றுமையாக இது இருக்கவேண்டும்.

அத்தகைய ஒற்றுமையைக் கட்டுவதற்கு, நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் விஷயத்தில், விசேஷமாக, பெரிய அளவுக்கு வெகு ஜனங்களைப் பின்பலமாகக்கொண்ட கட்சிகள் விஷயத்தில், ஒரு சரியான கொள்கையைக் கையாள வேண்டியது அத்தியாவசியமாகும்.

காங்கிரஸ், பூர்ஷ்வாக்களின் அரசியல் கட்சி; அது பல நிலச்சுவான்தார்களைத் தன் அணிக்குள் சேர்த்துக் கொண்டிருக்கிறது; ஆயினும் அதனுடைய அங்கத்தினர்களில் ஏராளமான ஜனநாயவாதிகள் இருக்கின்றனர். காங்கிரசுக்கு ஒரு ஏகாதிபத்ய-எதிர்ப்பு, ஜனநாயகப் பரம்பரை இருக்கிறது. சமீப காலத்தில் சர்க்காரின் நடவடிக்கைகளும், அதன் வாக்குறுதிகளும், அதனிடமிருந்து அப்பால் போய்க்கொண்டிருந்த சில பகுதிகளிடத்திலும் கூட காங்கிரஸின் நிலைமையை மீண்டும் பலப்படுத்திக்கொள்ள உதவியிருக்கின்றன. அத்துடன் கூடவே, காங்கிரசுக்குள்ளும், காங்கிரஸைப் பின்பற்றும் வெகுஜனங்களிடையிலும் தீவிர எண்ணங்களும், ஜனநாயகக் கருத்துக்களும் வளர்ந்துள்ளன.

காங்கிஸின்பால் நம்முடைய கண்ணோட்டமும், அதனுடைய அரசியல் கொள்கைகளைப் பற்றி நாம் விமர்சனம் செய்வதும் மேற் குறிப்பிட்ட யதார்த்த நிலைமைகளையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டுதான் இருக்கவேண்டும். நம்முடைய கண்ணோட்டமும், விமர்சனமும், நேர்மையான காங்கிரஸ்காரர்களை ஒற்றுமையின் பக்கம் ஆகர்ஷிக்கும்படியாக இருக்கவேண்டும். அவர்களை விரட்டும்படியாக இருக்கக்கூடாது. காங்கிரசுக்குள்ளேயே ஜனநாயகக் கொள்கைகளுக்கான போராட்டத்தை பலப்படுத்தும் படியாகவும், எவ்வளவு குறைபாடுகளுடனுவது ஒரு முற்போக்கான நிலையைக்

கடைப்பிடிக்கும் சக்திகளை பலப்படுத்தக்கூடியதாகவும் நம்முடைய விமர்சனம் இருக்கவேண்டும்.

தேசீயக் காங்கிரஸ் இன்று ஆளும் கட்சி. ஏகாதிபத்தியத்துடனும், நிலப்பிரபுத்துவ சக்திகளுடனும் சமரஸம் செய்து கொள்வதை எதிர்த்து நடத்த வேண்டிய போராட்டத்திலும், அதிகார வர்க்கம், போலீஸ் ஆகியவற்றின் அதிகாரங்களை எதிர்த்தும், ஜனநாயகம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்பதற்காகவும், நடத்த வேண்டிய போராட்டத்திலும், சர்க்காருடையவும், காங்கிரசுடையவும் கொள்கைகளை எதிர்த்தும்தான் மக்கள் போராட வேண்டியுள்ளது. ஆகவே, இந்த நிலையில், காங்கிரசுடன் பொதுவாக ஐக்ய முன்னணி என்ற கோஷம் எழுவதற்கே இடமில்லை.

ஆனால், இவ்வாறு கூறியதினால், ஜனநாயக முன்னணியானது ஒரு காங்கிரஸ்-எதிர்ப்பு முன்னணியாக இருக்கும் என்று யாரும் முடிவுக்கு வந்துவிடக்கூடாது. இதைக் காங்கிரஸ் எதிர்ப்பு அணியாகக் கருதக்கூடாது; ஏனெனில், நாம் ஏகாதிபத்திய-எதிர்ப்பு, நிலப்பிரபுத்வ எதிர்ப்புக் கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது என்பதினால் மட்டுமல்ல; காங்கிரசினுடைய உள் சேர்க்கையும்கூட இதற்குக் காரணமாகும்.

சோஷலிஸ்ட் கட்சி, பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி ஆகியவற்றின் உள்-சேர்க்கையும், தன்மையும், ராஜ்யத்திற்கு ராஜ்யம் வித்தியாசப் படுகிறது. ஆயினும், பொதுவாகப் பார்க்கும்போது, ஜனநாயகபூர்வமான எதிர்க் கட்சிகளென அவைகளையும் கொள்ளலாம். அவைகளுக்கு வெகுஜன ஆதரவு ஏற்பட்டுள்ளதென்றால், அது பிரதானமாக, சர்க்காரின் கொள்கைகளுக்கு ஜனநாயக பூர்வமான எதிர்ப்பின் அடிப்படையிலும், அவை சோஷலிசத்திற்காக நிற்பதாகக் கூறுவதின் அடிப்படையிலும்தான் ஏற்பட்டுள்ளது. இந்தக் கட்சிகளின் ஊழியர்கள் சோஷலிஸ மனப்பான்மையுடையவர்கள்.

சமீபகாலம் வரையிலும், பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி (பி. சோ. க)யின் பிரதான தலைமைப் பகுதி (சோஷலிஸ்ட் கட்சியும் இதில் உட்படும்) சோவியத் யூனியனையும், சீனாவையும் காரசாரமாகத் தாக்கும் கொள்கையையும், சமாதான இயக்கத்தை எதிர்க்கும் கொள்கையையும், கம்யூனிஸ-எதிர்ப்பின் பெயரால் ஜனநாயக ஒற்றுமையைக் கட்டுவதற்கு மறுக்கும் கொள்கையையும், காங்கிரசுடன் உடன்பாட்டுக்கு வருவதற்கு முயற்சிக்கும் கொள்கையையும் பின்பற்றி வந்தது.

இந்தக் கொள்கைகள் எவ்வாறு தவறானவை என்பது பி. சோ. கட்சி, சோஷலிஸ்ட் கட்சி ஆகியவைகளின் அங்கத்தினர்

களுக்குத் தெளிவாகி வருகின்றன. ஆகவே, அதன் விளைவாக, கடந்த ஓராண்டு காலத்தில், பல ராஜ்யங்களில் அக்கொள்கைகள் ஓரளவுக்கு மாற்றப்பட்டு வந்துள்ளன.

பல பிரச்னைகளிலும், பல இயக்கங்களிலும், போராட்டங்களிலும், இந்தக் கட்சிகள் கம்யூனிஸ்ட் கட்சியுடனும், இதர ஜனநாயக சக்திகளுடனும் கூட்டு சேர்ந்து வந்துள்ளன.

இந்த வளர்ச்சியை உறுதிப்படுத்தவும், முன்னுக்கு எடுத்துச் செல்லவும் நம் கட்சி எல்லா முயற்சியும் செய்யும். இடதுசாரிக் கட்சிகள் ஒன்றுபடுவதானது, மக்களின் முன்னேற்றமான பகுதிகளை ஒன்றுபடுத்துவதற்கு உதவுகிறது. வெகுஜனப் போராட்டங்களுக்கும், அதுபோலவே தேர்தலில் பங்கெடுத்துக் கொள்ளுவதற்கும் இது மிகவும் முக்கியமான ஒரு அம்சமாகும்.

கம்யூனிஸ்ட் கட்சி கட்ட முயற்சி செய்யும் ஒற்றுமை ஜனநாயக ஒற்றுமையாகும். ஆகவே, மத அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்தும் கட்சிகள்—அதாவது வகுப்புவாதக் கட்சிகள் விஷயத்தில் நம்முடைய கொள்கை, அவர்களுடைய பிளவுபடுத்தும் வகுப்புவாத சித்தாந்தங்களையும், பிற்போக்கான கொள்கைகளையும் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காது எதிர்த்துப் போராடும் கொள்கையாகத்தான் இருக்கவேண்டும். எந்தத் தேர்தலிலும் கம்யூனிஸ்ட் கட்சி அவைகளுடன் ஐக்ய அணி ஏற்படுத்திக் கொள்ளாது.

அதே சமயத்தில், இந்தக் கட்சிகளைப் பின்பற்றக் கூடிய வெகு ஜனங்களையும், தனிநபர்களையும் பொதுவான போராட்டத்திலும், பொதுவான நடவடிக்கையிலும் ஆகர்ஷிப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சி முயற்சி செய்யும்.

அதே சமயத்தில். சிறுபான்மை சமூகங்களின் நியாயமான கோரிக்கைகளைப் பாதுகாக்கவும், அவைகளுக்காக இயக்கம் நடத்தவும் கம்யூனிஸ்ட் கட்சி முற்படும்.

இந்தியாவின் விடுதலையையும், சுதந்திரத்தையும் பலப்படுத்துவதற்கும், தேசீயப் பொருளாதாரத்தைப் புனரமைத்து நம் மக்களின் நிலைமையை உயர்த்துவதற்கும் உதவும் ஸ்தூலமான கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி தேசம் பூராவும் பரவிய இயக்கத்தைத் துவக்கும். அத்தகைய இயக்கத்தின் ஒரு அத்தியாவசியமான பகுதி-மக்களின் உடனடி நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அவர்களின் ஜனநாயக உரிமைகள் விஸ்தரிக்கப்படவேண்டுவதற்கும் மக்களின் போராட்ட ஒற்றுமையைக் கட்டுவதாகும்.

மக்களின்மேல் விழும் தாக்குதல்களுக்கு எதிராக வெகுஜன எதிர்ப்பைத் திரட்டும் வேலை. மக்களின் வாழ்க்கை நிலைமைகளில் உடனடி அபிவிருத்தி காண்பதற்காக மக்களைத் திரட்டும் வேலை, ஆதரவு நடவடிக்கைகள், பிரஜா உரிமைகள், ஜனநாயக உரிமைகள் ஆகியவற்றுக்கான போராட்டங்கள் ஆகியவை மிகவும் விசேஷ முக்யத்துவம் பெறுகின்றன. அத்தகைய போராட்டங்களை நடத்துவதின்மூலம் நாம் மக்களின் நலவுரிமைகளைப் பாதுகாக்கிறோம்; அவர்களின் ஸ்தாபனத்தையும், ஒற்றுமையையும் உறுதிப்படுத்துகிறோம்; மேலும், பிரிட்டிஷ் மூலதனம், நிலச்சுவான்தாரிமுறை, ஏகபோக முதலாளிகளின் உரிமைகள் ஆகியவற்றின் நிலைகளைத் தாக்குவதின் மூலம் நம் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு விரும்பும்-காங்கிரசுக்குள்ளேயே இருக்கும் சக்திகளை பலப்படுத்துவதற்கு உதவுகிறோம்.

ஜனநாயகக் கோரிக்கைகளுக்கான இந்தப் போராட்டங்கள், நடவடிக்கைகள், இயக்கங்கள் ஆகியவற்றின்மூலம் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த வெகுஜனங்கள் ஒன்றுபடுகிறார்கள்; ஒற்றுமையின் அவசியத்தை உணருகிறார்கள்; ஒற்றுமையின் வலிமையை உணருகிறார்கள்; சலுகைகளையும் வெல்லுகிறார்கள். இந்தப் போராட்டங்களின் மூலம்தான் அவர்களுடைய மனோ உற்சாகம் உயர்த்தப்படுகிறது; பொதுஜன ஆதரவும் கிடைக்கிறது; சர்க்காரின் தாக்குதல்களும், ஆதிக்க வர்க்கங்களின் தாக்குதல்களும் பின் தள்ளப்படுகின்றன. இந்தப் போராட்டங்களின் மூலம்தான் ஒன்றுபட்ட ஸ்தாபனங்களைக் கட்டுவதற்கான சூழ்நிலைகள் சிருஷ்டிக்கப்படுகின்றன. ஜனநாயக சக்திகள் ஒன்றுபடுத்தப்படுவதற்கும், பலப்படுவதற்கும் ஐக்ய ஸ்தாபனங்கள் அத்தியாவசியமாகும்.

முடிந்த சந்தர்ப்பங்களிலெல்லாம், அத்தகைய வெகுஜனப் போராட்டங்கள், போராடும் மக்களின் ஒற்றுமையை பிரதிநிதித்துவப் படுத்தும் பரந்த ஐக்யக் கமிட்டிகள் மூலம் நடத்தப்படுவது அவசியமாகும்.

இந்த வெகுஜனப் போராட்டங்கள் விவசாயத்துறை, தொழிலாளர்துறை, பிரஜா உரிமைகள், வரிவிதிப்பது போன்றவை சம்பந்தமான சர்க்காரின் கொள்கைகளையும் அம்பலத்திற்குக் கொண்டு வருகின்றன. பிற்போக்கான கொள்கைகளுக் கெதிரான இயக்கத்தை அவை பலப்படுத்துகின்றன; முற்போக்கான கொள்கைகளை ஏற்றுக்கொள்ளவும், அவற்றை அமுல் நடத்தவும் வெகுஜன ஒற்றுமையை உருவாக்குகின்றன.

ஜனநாயக இயக்கம் முன்னேறிச் செல்வதற்கு அத்தகைய போராட்டங்கள் அத்தியாவசியமானவை என்றாலும்கூட, அவை

மட்டும் போதுமானவையல்ல; அவைகளுடன் பின்வருவனவற்றையும் இணைத்துச் செய்யவேண்டும்.

(i) சமாதானம், சோவியத் யூனியன், சீனா, இதர சோஷலிஸ்ட் நாடுகள் ஆகியவற்றுடன் நட்புறவு, ஆசிய ஒற்றுமை, ராணுவ ஒப்பந்தங்களுக்கு எதிர்ப்பு; சோஷலிஸ்ட் உலக மார்க்கெட்டுடன் உறவுகளை பலப்படுத்திக் கொள்வது—ஆகியவற்றுக்கான வெகுஜன இயக்கத்தை விரிவுபடுத்துவதற்கான போராட்டங்கள்.

(ii) தேசப் புனரமைப்புக்காக பொதுஜன நலவுரிமைகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளுக்காகத் தொடர்ச்சியாகவும், இடைவிடாமலும் இயக்கம் நடத்துவது.

(iii) தொழிலாளி வர்க்கத்தினிடையிலுள்ள பிளவைப் போக்குவதற்கும், ஜனநாயக இயக்கத்தினிடையிலுள்ள பிளவை போக்குவதற்கும் சரியான ஐக்ய அணித் தந்திரங்களைக் கையாள்வது.

(iv) எல்லாத் துறைகளிலும் நீடித்த வெகுஜன நடவடிக்கைகள் சர்க்காரின் சமூக நலத் திட்டங்கள், ப்ராஜெக்டுகள் ஆகியவற்றில் பங்கு கொண்டு அவற்றின் மூலம் மக்களுக்கு அதிகப்பட்சமான நன்மைகள் கிடைக்கும்படி செய்வது இதனுடைய ஒரு பிரிக்க முடியாத பகுதியாகும்;

(v) பெண்களுக்கு சம உரிமைகள் பெற்றுக்கொடுக்க தீவிர முயற்சிகள்; கலை, சுகாதாரம் முதலிய துறைகளில் பலனுள்ள முறையில் தலையிடுவது.

(vi) வெகுஜன ஸ்தாபனங்களை பலப்படுத்துவது; விஸ்தரிப்பது.

(vii) கம்யூனிஸ்ட் கட்சியை ஒரு வெகுஜனக் கட்சியாகக் கட்டுவது.

இந்தக் கடமைகளை யெல்லாம் சேர்ந்தாற்போல் அமுலுக்குக் கொண்டுவருவது; அத்தகைய நடவடிக்கையின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக வெகுஜனப் போராட்டங்களை நடத்துவது ஆகியவற்றின் மூலம்தான் ஜனநாயக முன்னணியைத் தொடர்ச்சியாக விஸ்தரிக்கவும், பலப்படுத்தவும் முடியும். பகுதிப் போராட்டங்களை இணைத்துச் செய்ய முடியும். அவற்றை, சர்க்காரின் ஜனவிரோதக் கொள்கைகளைத் தோற்கடிக்கவும், முற்போக்கான கொள்கைகளைக் கடைப்பிடிக்கும்படி செய்யவும் சக்திவாய்ந்த ஒரு பொதுஜன அரசியல் இயக்கமாக மாற்ற முடியும்.

இத்தக் கடமைகளைச் செய்யத் தவறினல், உடனடிப்போராட்டங்களையே அது பலஹீனப்படுத்தும். இந்தப் போராட்டங்கள் ஸ்தல சம்பந்தப்பட்டதாகவும் பகுதிப் போராட்டங்களாகவும் இருப்பதால், வீரம் செறிந்த முறையில் இவை நடத்தப்படும் போது, மக்களின் அனுதாபத்தையும், ஆதரவையும் பெறமுடியும். சில கோரிக்கைகளையும் அடைய முடியும். ஆயினும் இவற்ருல் ஜனநாயக இயக்கம் பூராவின் மீதும் ஒரு சக்திவாய்ந்த பிரதிபலிப்பை ஏற்படுத்த முடியாது; அதைப் பலப்படுத்தவோ, விரிவுபடுத்தவோ முடியாது.

தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கிடையே தொடர்ந்து இருந்துவரும் பிளவுதான் ஜனநாயக முன்னணியின் மிகத் தீவிரமான பலவீனமாகும். பல்வேறு அகில இந்தியத் தொழிற்சங்க ஸ்தாபனங்களோடு இணைக்கப்பட்டுள்ள போட்டித் தொழிற் சங்கங்களிலே பிரிந்து பிளவுண்டு கிடக்கின்றனர். தொழிற் சங்க, தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்கான போராட்டமானது முக்கியமான ஒரு முன்னேற்றத்தை அடைந்திருக்கிறதென்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். முதலாளிகளின் தாக்குதல்களுக்கு எதிரான தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்கள் வளர்வதானது செயலிலே தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையை பலப்படுத்துவதற்கு உதவியுள்ளது.

அரசியல் அபிப்பிராயங்கள் எதுவாக இருந்த போதிலும் அவற்றைக் கைவிட்டு சகல பகுதி தொழிலாளர்களையும் கொண்ட பல அகில இந்திய தொழிலாளர் சம்மேளனங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது; முக்கியமான ஸ்தலங்களிலே போட்டிச் சங்கங்கள் இணைந்திருப்பது; பல இடங்களிலே தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்கக் கூட்டுக் கமிட்டிகள் நிறுவியிருப்பது ஆகியவையெல்லாம் ஒற்றுமை வேண்டுமென்பதற்காக வளர்ந்துவரக் கூடிய இந்த ஆவலின் ஸ்தூலமான எடுத்துக் காட்டுகளாகும்.

நமது நாட்டிற்கும் சீன சோவியத் யூனியன் போன்ற நாடுகளுக்குமிடையே நட்புறவு வளர்ந்து வருவதும்; இந்தியாவிற்கும் சோவியத் யூனியனுக்குமிடையேயும், இந்தியாவிற்கும் சீனவிற்குமிடையேயும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் பரிமாற்றம் வளர்ந்து வருவதும், கம்யூனிஸ எதிர்ப்புடன் கூடிய வளர்ச்சி உணர்ச்சிகளையெல்லாம் அகற்றுவதற்கு உதவியுள்ளன. ஒற்றுமை வேண்டுமென்ற ஆவலைப் பெருக்கவும் அவை உதவி செய்கின்றன. தொழிற்சங்க ஒற்றுமைக்கான போராட்டத்தை ஒரு புதிய உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கான நிலைமைகள் பக்குவமாகியுள்ளன.

இந்த வளர்ச்சிகளைக் கண்டு ஆளும் வர்க்கமானது சுதந்திர மான தொழிற்சங்க இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, ஒழித்துக் கட்ட மிகவும் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது, ஆனால் இன்று தொழிற் சங்க ஒற்றுமை என்ற கோஷத்தை வைத்து தன்னுடைய இந்தத் தாக்குதலை மறைக்க முயலுகிறது. உண்மையில் பார்க்கப்போனால் ஆளும் வர்க்கத்தின் கொள் கைகளை நிறைவேற்றக்கூடிய, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குட் பட்ட தொழிற்சங்கங்களை சட்ட பூர்வமாக தொழிலாளிகள் மீது திணிக்க அது முயற்சிக்கிறது; இதன் மூலம் தொழிலாளி வர்க்க விரோத கொள்கைகளுக்கும், முதலாளிகளின் தாக்குதல் களுக்கும் எதிராக வளர்ந்து வரும் தொழிலாளர்களின் எதிர்ப்பை தடுத்து நிறுத்த அரசாங்கம் விரும்புகிறது.

எனினும், ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தில் இரு பகுதிகளுக்குமிடையே சமீபத்தில் ஏற்பட்ட ஒப்பந்தமும், தபால் தந்தி இலாகா சிப்பந்திகளின் ஒரே சம்மேளனம் தோன்றியதும், பாதுகாப்பு இலாகா ஊழியர்கள், தொழிலாளர்களின் ஒரே சம்மேளனம் உருவாகியிருப்பதும் இந்த கொள்கைக்கு எதிராகக் கிடைத்த கடும் உதைகளாகும்.

ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு சங்கம் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும், சங்கங்களின் நிர்வாக குழுக்கள், நிர்வாகிகள் ஆகியோரை ஜனநாயக தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்க வேண் டும் என்ற அடிப்படையிலும் பல்வேறு ஸ்தலங்களிலே இன்று இருக்கக்கூடிய தொழிற் சங்கங்களின் ஒற்றுமையைக் கட்டுவதற் கும், அகில இந்தியாவிற்கும் ஒரே தொழிற் சங்க தலைமைக் காரியாலயத்தை உருவாக்குவதற்கும் வேண்டிய போராட்டத்தை நடத்துவதற்கு ரயில்வே தொழிலாளர்களின் சம்மேளனமும், இதர சம்மேளனங்களும் ஒன்றுபட்டிருப்பதானது ஒரு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறது. இத்தகைய ஒற்றுமைக்கு வேண்டிய நிலையான இயக்கத்தை நடத்துவதுதான் இன்றுள்ள மிக அவசரமான கடமையாகும்.

மக்களின் சகல வர்க்கங்களிடையேயும் முற்போக்கான, ஜனநாயக கருத்துக்கள் பரவுவதால் தொழிலாளி வர்க்கத்திற்கு ஏற்படக்கூடிய பலன்கள் மிகத்தெளிவாகத் தெரியவருகின்றன.

ஜனநாயக இயக்கத்திலே எவ்வளவு அதிகமாக தொழிலாளி வர்க்கம் பங்கு கொள்கிறதோ அவ்வளவிற்கு அதிகமாக அது நாட்டிலுள்ள சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளுடன் நேச உறவை ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது. தொழிலாளி வர்க்கத்தின் மீது அதற்கு விரோதமான கருப்புச் சட்டங்கள்

திணிக்கப்படுவதை தடுப்பதற்கான ஒரு கடும் போராட்டமில்லாமல் தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்கான போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தமுடியாது.

முதலாளிகளும், அரசாங்கமும் தொடுக்கும் தாக்குதலுக்கு எதிரான போராட்டமும், நல்வாழ்வுக்கான போராட்டமும் மேலே கூறப்பட்டுள்ள ஜனநாயக இயக்கத்தின் பொதுவான கடமைகளோடு இணைந்து பிணைந்து செல்லவேண்டும். இது தொழிலாளி வர்க்கத்தை ஒற்றுமைப்படுத்துவதோடு மட்டுமின்றி, தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களுக்கும் கோரிக்கைகளுக்கும் வெகு ஜன ஆதரவையும் பெற்றுத் தருகிறது; இந்த போராட்டங்களெல்லாம், நல் வாழ்வுக்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும், தேசப் புனருத்தாரணத்திற்காகவும் இந்திய மக்கள் நடத்தும் போராட்டத்தின் பகுதியாகும். ஒற்றுமை, போராட்டம், பொதுவான ஜனநாயக இயக்கம் ஆகியவற்றிற்கிடையேயுள்ள உறவை இந்த வெளிச்சத்தில்தான் பார்க்க வேண்டும்.

குறிப்பாக, எப்படித் தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கை பூர்த்தி செய்யப்படுவதானது நமது பொருளாதார புனர்நிர்மாணத்தை கொண்டு வருவதற்கு மிகவும் அவசியமென்பதை தொடர்ந்து விளக்கியாக வேண்டும். இன்று, தேசப் புனர் நிர்மாணத்தின் பெயரால் ரேஷனலைஸேஷன், அதிகப்படியான வேலைப்பளு போன்ற நடவடிக்கைகளின் மூலம் அரசாங்கமும் முதலாளிகளும் தொழிலாளி வர்க்கத்திற்கு எதிரான தாக்குதலைத் தொடுக்கக்கூடிய நிலையிலே, இதுமிகஅவசரமானகடமையாகிறது.

தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்திச் சீர்குலைக்கவும், அதைத் தங்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரவும், தேசப் புனர் நிர்மாணம் என்ற பெயரால் ஏமாற்றவும், தொழிலாளி வர்க்கத்திற்கெதிராக பொதுமக்களை திருப்பிவிடவும் அரசாங்கம் செய்யும் முயற்சிகளை முறியடிக்கமுடியும். அரசாங்கம் கொண்டு வரும் சட்டங்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றில் தலையிட்டு அவற்றைத் தொழிலாளி வர்க்கம் பயன்படுத்திக் கொள்ளவும் இது உதவி செய்யும்.

தொழிலாளி வர்க்கமானது சில துறைகளிலே அரசாங்கத்தினிடமிருந்தும் முதலாளிகளிடமிருந்தும் சில சலுகைகளைப் பெற்றுள்ளது. ஒரு ஒன்றுபட்ட தொழிலாளி வர்க்கமானது இன்னும் மிக முக்கியமான சலுகைகளைத் தனக்கு பெற்றுக் கொள்வதோடு, வரக்கூடிய காலத்தில் மேலும் மேலும் ஜனநாயக இயக்கத்தின் முன்னணிப் படையாகவும் இயங்க முடியும்.

இத்தகைய ஒரு நிலைமையில் தொழிற் சங்க ஜனநாயகம் என்ற அடிப்படையிலும், அகில இந்திய ரீதியிலே தொழில் வாரியான சம்மேளனங்கள் என்ற அடிப்படையிலும் ஒன்றுபட்ட மத்திய தொழிற்சங்க ஸ்தாபனங்களை உருவாக்குவது; ஒரு தொழிலுக்கு ஒரே ஒரு சங்கத்தையே ஏற்படுத்துவது போன்ற வற்றின் மூலம் தொழிற் சங்க ஒற்றுமையைக் கட்டும் கடமை யானது என்றுமில்லாத ஒரு அவசரமான கடமையாகியுள்ளது. சகல மட்டங்களிலும் தொழிற் சங்கங்களை ஜனநாயகமான முறையிலே நடத்துவது மிகவும் முக்கியமாகும்.

இன்னும் ஒரு தீவிரமான பலவீனமும் இருக்கிறது. அது தான் கட்சியின் செல்வாக்கிலுள்ள தொழிலாளிகள் மத்தியிலும் கூட இருக்கக்கூடிய அறைகுறையான அரசியல் உணர்வாகும்; இந்தபலவீனம் ஜனநாயக இயக்கம் முழுவதையுமே ஒரு தாழ்ந்த மட்டத்தில் வைத்திருக்கிறது. சமாதானம், பிரஜா உரிமைகள், விவசாயிகள் மற்றுமுள்ள வர்க்கங்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தருவது போன்ற பொதுவான ஜனநாயக பிரச்னை களுக்காக ஒரு பெரிய அளவிலே தொழிலாளிகளை நடவடிக்கை யில் இறங்கச் செய்வதற்கு இந்த பலவீனம் ஒரு தடையாக நிற்கிறது. எனவே, இந்த பலவீனத்தை போக்குவது கட்சியின் முக்கியமான கடமைகளில் ஒன்ருகும்.

மத்தியதர வர்க்க சிப்பந்திகளிடையே தங்களுக்கான தொழிற் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற ஆவல் வளர்ந்து வருகிறது; அத்துடன் இதுவரை தொழிலாளி வர்க்கம் மட்டுமே கடைபிடித்து வந்த புதிய மிகத் தீவிரமான போராட்ட ரூபங்களை யும் அவர்கள் கடைப்பிடிக்க விரும்புகிருர்கள்; ஜனநாயக இயக் கத்திலுள்ள ஒரு முக்கியமான அம்சம் இது. தொழிலாளி வர்க்கம் எதிர்நோக்கியதைப் போன்ற அதே பிரச்னைதான் அவர்களை இன்று எதிர்நோக்கின்றன—பற்ருக்குறைச் சம்பளம், ஆட் குறைப்பு, பழி வாங்குதல், வளர்ந்து வரும் வேலையில்லா திண் டாட்டம், பட்டினி போன்றவைகளே இந்தப் பிரச்னைகள். அரசாங் கத்தின் ஜன விரோத, ஜனநாயகத்திற் கெதிரான கொள்கை களின் விளைவாக இந்தப் பகுதிகளில் தீவிர மனப்பான்மை வளர்ந்து வருவது குறிப்பிடவேண்டிய மற்ருெரு அம்சமாகும். இவர்களின் நலன்களை நாம் உறுதியாகப் பாதுகாக்கவேண்டும்; அவர்கள் ஸ்தாபனம் பலமடைவதற்கு உதவி செய்ய வேண்டும்; இதன் மூலம் அவர்களை ஜனநாயக இயக்கத்திற்குள்ளே கொண்டு வந்து தொழிலாளி வர்க்கத்துடன் அவர்களை ஒன்று படுத்த வேண்டும்.

ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள் போன்ற சிப்பந்திகளும்

தொழிலாளி வர்க்கத்தைப் போன்றே பற்றுக்குறை சம்பளம், ஆட்குறைப்பு, வேலையில்லாத் திண்டாட்ட பயம், பட்டினி போன்ற பிரச்னைகளை எதிர்நோக்குகின்றன. இவர்களின் நலன்களை நாம் பாதுகாக்க வேண்டும்; அவர்கள் ஸ்தாபனங்களைப் பலப்படுத்த உதவி செய்ய வேண்டும்.

நில வெளியேற்றம், கடுமையான வரி விதிப்பு ஆகியவற்றிற்கெதிராகவும், சரியான விலைவாசிகளுக்காகவும், விவசாயக் கடன்களுக்காகவும், விவசாய மக்கள் நடத்தும் போராட்டத்தின் வளர்ச்சி; குறைந்தபட்ச ஊதியம், நிலம் ஆகியவற்றிற்காக விவசாயத் தொழிலாளிகள் நடத்தும் போராட்டங்கள் ஆகியவையெல்லாம் சமீப காலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன; பல வெற்றிகளையும் பெற்றுள்ளன. விவசாய மக்களின் நிலைமை மேலும் மேலும் சீரழிந்துகொண்டு வருவதால் நாடு முழுவதும் இப்போராட்டங்கள் பெரிய முக்கியத்துவத்தை அடைகின்றன. விவசாய சங்கங்களையும், விவசாயத் தொழிலாளர்களின் சங்கங்களையும் மேலும் விரிவுபடுத்தி பலப்படுத்த வேண்டிய கடமை பற்றி விசேஷமாக வலிவுறுத்தியாக வேண்டும்.

தொழிலாளி வர்க்கத்திற்கும் விவசாய வர்க்கத்திற்குமிடையே ஒரு சரியான முரணற்ற முறையில் அனுதாப இயக்கத்தை நடத்த முடியாமலிருப்பது, ஜனநாயக முன்னணியைக் கட்டுவதில் தொடர்ந்து இருக்கக்கூடிய ஒரு பெரிய பலவீனமாகும். எனவே, கம்யூனிஸ்ட் கட்சியானது தொழிலாளி விவசாயி வர்க்கங்களுக்கிடையே அனுதாப இயக்கங்களையும் ஒற்றுமையையும் கட்டுவதற்கு தீவிரமான கவனம் செலுத்த வேண்டும்; இத்தகைய ஒற்றுமைதான் ஐக்கிய ஜனநாயக முன்னணியின் பிரதான அடிப்படையாக இருக்கும்.

காங்கிரஸ் ஆட்சியிலே பெரிதும் துன்பத்திற்கு ஆளாகி இருக்கக்கூடிய ஒதுக்கப்பட்ட மக்கள் பகுதியான தொழிலாளி வர்க்கம், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை மத்தியதர விவசாயிகள், கைத்தொழிலாளர்கள், நகரப்புறத்திலே இருக்கக்கூடிய மத்தியதர வர்க்கத்தினர் ஆகியோரின் நலன்களை கட்சி தீவிரமாக பாதுகாக்க வேண்டும். இவர்கள்தான் நமது மக்களின் பெரும் பகுதி; எனவே, அவர்கள் ஜனநாயக இயக்க வளர்ச்சியின் சகல கட்டங்களிலும் அதனுடைய உறுதியான அடிப்படையாகவும், பிரதான சக்தியாகவும் இருக்க வேண்டும்.

அதே சமயத்தில், பணக்கார விவசாயிகள், சிறிய உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் ஆகியவரின் நியாயமான கோரிக்கைகளுக்காகவும் கட்சி பாடுபட வேண்டும். பொருளாதார சுதந்

திரத்தை அடைவதற்காக நமது மக்கள் நடத்தும் போராட்டத்தை பலப்படுத்தி முன்கொண்டு செல்வதற்காக, அந்நியப் போட்டிக்கு எதிராக தேசீய முதலாளிகளுக்கு கட்சி ஆதரவு தரும்; அத்துடன் பொருளாதார ரீதியில் பிறரைச் சார்ந்திருக்கும் நிலைமையை அகற்றுவதற்கு அம்முதலாளிகள் எடுக்கும ஒவ்வொரு முயற்சியையும் ஆதரிக்கும்.

அநியாயமான வரி விதிப்பு, பிரஜா உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாப்பது, அந்நியப் போட்டிக்கு எதிராக தேசியத் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது போன்ற பிரச்னைகளில் மக்களை ஒன்றுபடுத்தக்கூடிய போராட்டங்களையும், இயக்கங்களையும் கட்சி ஆரம்பிக்கும். திட்டங்கள், குறிக்கோள்கள் பற்றிய ஸ்தூலமான பிரேரணைகளுக்காகவும், அரசாங்கத்தின் திட்டங்கள், யோசனைகள் ஆகியவற்றை மக்களுக்கு மிகவும் சாதகமான முறையில் அமுல் நடத்துவதற்கும், இயக்கங்களை கட்சி ஆரம்பிக்கும்.

பெண்கள் நமது நாட்டின் ஜனத்தொகையில் சரிபாதியாக இருக்கின்றனர்; ஜனநாயக இயக்கத்திற்கு ஒரு சக்திவாய்ந்த பகுதியாக இவர்களிருக்க முடியும்; நாட்டை எதிர்நோக்கும் தேசியக் கடமைகளை நிறைவேற்றவும் அவர்கள் பலமுள்ள சக்தியாக விளங்க முடியும்; ஆனல் அவர்கள் மிகக் கடுமையான சமூக, பொருளாதாரக் கொடுமைகளால் இன்னும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையை எதிர்த்தும், பெண்களுக்குச் சம உரிமைகள் வேண்டும் என்பதற்காகவும், பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றச் செய்வதின் மூலம் மட்டுமின்றி, மக்களின் மனோபாவத்தைத் தத்துவார்த்தப் போராட்டத்தின் மூலம் மாற்றுவதற்கும், கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாகப் போராட வேண்டும்.

பெண்களை, ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்ட பெண்கள் இயக்கத்தில் கொண்டுவந்து, அவ்வியக்கத்தை எதிர் நோக்கக் கூடிய கடமைகளினடிப்படையில், அவர்களை ஒன்று படுத்தவும் கம்யூனிஸ்ட் கட்சி முயலவேண்டும்.

இளைஞர்களையும், மாணவர்களையும் எதிர் நோக்கும் பிரச்னைகளின்பால் கட்சி தீவிரக் கவனம் செலுத்த வேண்டும். பஞ்ச, வெள்ளக் கொடுமையை எதிர்த்துப் போராடவும்; வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, நோய், அஞ்ஞானம் முதலியவற்றை அகற்றவும், இன்றுள்ள சட்டங்களையும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் பயன்படுத்தக்கூடிய முறையில், சகல பகுதி மக்களின் ஒத்துழைப்போடு கூடிய நடவடிக்கைகளை மிகவிரிந்த

அளவிலே கட்சி நடத்த வேண்டும். சமாதானத்திற்கான வெகு ஜன இயக்கத்தைக்கட்சி தொடர்ந்து பலப்படுத்தவேண்டும்; சகல கட்சிகளிலுமிருக்கக்கூடிய, தேசபக்தியுள்ள, சமாதானத்தை விரும்பும் இந்தியர்கள் அனைவரையும் இந்த இயக்கத்தில் திரட்ட வேண்டும்

அரசாங்கம் ஆரம்பிக்கின்ற அல்லது நடத்துகின்ற திட்டங்களிலும், நிர்மாண வேலைகளிலும் பங்கு கொள்ளாமலிருக்கும் போக்கு கட்சிக்குள்ளே முன்பைவிடக் குறைந்துள்ளது; எனினும் இன்னும் பல பிராந்தியங்களில் இப்போக்கு தொடர்ந்து நீடிக்கிறது. இதைப்பூரணமாக அகற்றியாக வேண்டும். அவற்றிலே நாம் பங்கு கொள்ளவேண்டும்; அங்குள்ள ஊழல், திறமையின்மை, அதிகாரவர்க்கப் பழக்கங்கள் ஆகியவற்றை முறியடிக்கவேண்டும்; இந்த வேலைகளெல்லாம், ஜனங்களுக்கு அதிகப்படியான பயனை அளிக்கக்கூடிய முறையில் நிறைவேற்றப் படுவதற்கு நாம் உதவி செய்யவேண்டும். அதே சமயத்தில் பொது ஜனங்களுக்குத் தேவையான திட்டங்களையும், வேலைகளையும் நாமே தயாரிப்பதில் நாம் முன் கை எடுத்து வேலை செய்ய வேண்டும். கட்சி வேற்றுமை பாராது மக்களுக்குச் சேவை செய்வதற்காக, சகல முற்போக்கான நபர்களையும் ஒன்று திரட்டுவதற்கு, இந்தத் திட்டங்களும், நிர்மாண வேலைகளும் முக்கியமானதோர் சாதனமாகும். இந்த வேலையானது, கட்சியும், நாம் பணியாற்றக்கூடிய வெகுஜன ஸ்தாபனங்களும் செய்யக்கூடிய வேலையின் ஒரு முக்கியமான பகுதியாக விளங்க வேண்டும்.

ஸ்தல ஸ்தாபனங்களை ஜனநாயகமான முறையில் இயங்கச் செய்வது இன்று பெரும் முக்கியத்துவத்தை அடைந்துள்ளது. மத்திய, மாகாண சர்க்கார்கள், இவற்றின் நிர்வாகத்தை, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களுக்குப் பதிலாக, மேலும் மேலும் நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கின்றனர். இன்று இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களுக்குள்ள அதிகாரங்களும் கூடக் குறைக்கப்படுகின்றன. ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் அதிகாரவர்க்கம் தலையிடுவதையும், ஆதிக்கம் செலுத்துவதையும் எதிர்த்துக் கம்யூனிஸ்ட் கட்சி போராடும்; பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் மூலம் இந்த நிர்வாகம் ஜனநாயகமான முறையில் நடப்பதை உறுதி செய்வதற்காக கட்சி முயற்சி செய்யும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தல ஸ்தாபனக் குழுக்கள் மூலம் நிர்வாகம் நடத்துவதானது, மக்களின் தேவைகளைக் கவனித்து, அவர்களின் நலன்களைப் பாதுகாக்கப் பெறும் வாய்ப்புகளை அளிக்கின்றன.

தத்துவார்த்த-அரசியல் வேலையோடு, இவ்விதம் தொடர்ந்து

சர்வாம்சத்துறைகளிலும் நடத்தக்கூடிய நடவடிக்கைகள் மூலம் தான், வெகுஜன ஸ்தாபனங்களைப் பலப்படுத்த முடியும்; பெரிதும் போர்க்குணமுள்ள, தியாக புத்தியுடைய நபர்களைக்கட்சியின் பால் இழுக்கமுடியும்; கட்சி ஒரு வெகுஜனக்கட்சியாக வளர்வது சாத்தியமாகும்; இவ்விதம் கட்சி வளர்வது ஜனநாயக முன்னணியின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமாகும்.

விரிந்த ஜனப்பகுதிகளிடையே தத்துவார்த்த—அரசியல் வேலையை நடத்துவது, வெகு ஜன ஒற்றுமையைக் கட்டுவதற்கு வேண்டிய முக்கியமான ஆயுதமாகும். சோஷலிஸ, ஜனநாயக உணர்ச்சிகளால் உந்தப்பட்டு வரக்கூடிய பொதுஜன சக்திகளைக் கெட்டிப்படுத்துவதற்கும்; அரசாங்கமும், காங்கிரஸும் நடத்தக் கூடிய மிகப் பெரிய பிரச்சாரத்தை முறியடிக்கவும்; பிற்போக்கான வகுப்புவாத சக்திகளின் நாசகாரச் செல்வாக்கை அகற்றவும், இந்தத் தத்துவார்த்த – அரசியல் வேலையானது மிகப் பெரிய முக்கியத்துவத்தை இன்று பெற்றுள்ளது. பொதுஜனக் கலாச்சார நடவடிக்கைகளை வளர்ப்பதானது, தத்துவார்த்த – அரசியல் வேலையைப் பலப்படுத்துவதில் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்க வேண்டும்.

அரசாங்கமும், ஆளும் கட்சியான காங்கிரஸும், தீவிரமான சீர்திருத்தங்கள் வேண்டுமென்பதை இன்று மறுக்க முடியவில்லை; ஆனால் வெகுஜனப் போராட்டங்களில்லாமலும், பொதுஜன இயக்கத்தைப் பலப்படுத்தாமலுமே இச்சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட முடியும் என்று அவர்கள் உபதேசம் செய்கின்றனர். வர்க்கப் போராட்டம், இந்தியப் பாரம்பரியத்திற்குப் புறம்பானது என அவர்கள் கூறுகின்றனர்; ஆனால் அதே சமயத்தில், சௌகரியக்காரக் கும்பல் மக்கள் மீது தொடுக்கும் தாக்குதல்களுக்கு ஆதரவளிக்கின்றனர். "எல்லோருடைய அங்கீகாரத்துடன்" மெதுவாக, மேல்மட்டத்திலேயே, அரசாங்க நடவடிக்கைகள் மூலம் மாற்றங்கள் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையையூட்டுகின்றனர். சகல போர்க்குணமுள்ள நடவடிக்கைகளையும், வெகுஜன எதிர்ப்பையும், அராஜகம் என்று தூற்றுகின்றனர்.

வகுப்பு வாதப் பிற்போக்கு சக்திகள் தவறான பிரச்னைகளை எழுப்பி, மக்களுக்குக்கிடையே வெறுப்பை வளர்த்து, மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கின்றனர்.

பத்திரிக்கைகள், மேடைப் பிரசங்கம் ஆகியவற்றின் மூலம் மட்டுமின்றி, ஒவ்வொரு கட்சி அங்கத்தினரும், ஒவ்வொரு ஊழியரும், ஒவ்வொரு கட்சி யூனிட்டும், நாட்டின் சகல பகுதிகளிலும், கட்சியில் சேராமலிருக்கும் மக்களிடம் தினந்தோறும் தங்களுக்குள்ள தொடர்பைப் பயன் படுத்திக் கொண்டு,

பொறுமையான, தொடர்ந்த தத்துவார்த்தப் பிரச்சார வேலையை நடத்தவேண்டும். ஜனநாயக முன்னணியைக் கட்டும் கடமையின் பிரிக்கமுடியாத வேலை இது

இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதும்; வெகுஜன இயக்கமும், மக்களின் உணர்வும் வளர்வதும்; மக்களின் போராட்ட ஒற்றுமை வளர்வதும், ஜனநாயக சக்திகள் பலமாக இருக்கக் கூடிய இராஜ்யங்களிலே, ஒரு குறைந்தபட்சத் திட்டத்தை நிறைவேற்றக் கூடிய ஒரு மாற்று சர்க்கார் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோஷத்தை ஒரு நடைமுறைக் கோஷமாக மாற்றுவதற்கு வேண்டிய சூழ்நிலைமைகளை உண்டாக்கும். ஜனநாயக இயக்கமும், கட்சியும் போதுமான பலத்தைப் பெறக்கூடிய இடங்களிலே, பொதுத் தேர்தலில் இந்தக் கோஷத்தைப் பிராதான கோஷமாகக் கொண்டுவரவேண்டியது மிகவும் அவசியமாகும்.

எங்கெல்லாம் அத்தகைய சர்க்கார் நிறுவப்படுமோ, அங்கெல்லாம் அந்த சர்க்கார் மக்களின் நலன்களையும், உரிமைகளையும் பாதுகாக்கும்; சூழ்நிலைகளுக்குகந்த அதிகப்பட்ச சீர்திருத்தங்களை அது நிறைவேற்றும்; ஜனநாயக இயக்கத்தை முன் கொண்டு செல்லவும் சமாதானப் போராட்டத்தைப் பலப்படுத்தவும் அது உற்சாகமூட்டி, உதவி செய்யும். இத்தகைய ஒரு சர்க்கார் வேண்டுமென்ற கோஷத்தை அடிப்படையாகக்கொண்டு தேர்தல் போராட்டங்கள் நடத்துவது சாத்தியமில்லாத இராஜ்யங்களில், ஜனநாயக இயக்கத்தை முன் கொண்டு செல்வதற்கு வேண்டிய ஒரு முக்கியமான கடமையாக, இத்தேர்தல்கள் மூலம் சட்டசபைகளில் ஜனநாயக எதிர்ப்பைப் பலப்படுத்தக் கட்சி முயற்சி செய்யும். பார்லிமெண்டிலும், சட்டசபைகளிலும், ஜனநாயக எதிர்ப்பைப் பலப்படுத்துவதற்கு ஜனநாயக எதிர்ப்பின் ஒரு அங்கமாகக் கட்சி ஒரு பலமான ஸ்தானத்தைப் பெற வேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சி நாட்டின் முன்வைத்துள்ள இலட்சியங்களும், அதன் கொள்கைகளும், நடவடிக்கைகளும் நாட்டு நலனுக்கும், மக்களின் நலன்களுக்கும் உகந்ததாகும். எனவே இக்கொள்கைகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் ஆதரவாகவும், இந்த இலட்சியத்தை அடைவதற்காகவும், சகல அரசியல் கட்சிகளிலுமுள்ள மக்கள் பகுதியினர் அனைவரையும் ஒன்று திரட்ட தன்னாலியன்ற அனைத்தையும் கட்சி செய்யும். இந்த உண்மையான தேசியக் கடமையிலே, நாட்டிலுள்ள சகல புரட்சிகரமான, தேச பக்த சக்திகளின் ஒத்துழைப்பும் கட்சிக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை அதற்குண்டு.

ஜனசக்தி பிரஸ், சென்னை-5.